வானவில்

VAANAVIL

இதழ் 101 | வைகாசி 2019

ISSUE 101 | MAY 2019


# முஸ்லீம் மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் நன்கு திட்டமிடப்பட்டவை!

இலங்கையில் இவ்வருடம் ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும், நட்சத்திர விடுதிகள் மீதும் ஐ.எஸ். பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட தற்கொலைத் குண்டுத் தாக்குதல்களால் 250 இற்கும் மேலானவர்கள் கொல்லப்பட்டதுடன், 500 இற்கும் மேலானவர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் இலங்கையர்களை மட்டுமின்றி, முழு உலக மக்களையும் அதிர்ச்சியிலும் பீதியிலும் ஆழ்த்தியது.

அதைத் தொடர்ந்து தற்பொழுது வடமத்திய மாகாணத்தின் பல பகுதிகளில் முஸ்லீம் மக்களின், வீடுகள், வர்த்தக நிலையங்கள், பள்ளிவாயல்கள் என்பன தாக்கப்பட்டு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இதில் மிகவும் கண்டிக்கத்தக்க விடயம் என்னவெனில், கலகக்காரரை கட்டுப்படுத்த வேண்டிய பொலிசார் இந்தத் தாக்குதல்களைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தமைதான்.

இந்தத் தாக்குதல்களால் முஸ்லீம் மக்கள் உட்பட முழு இலங்கை மக்களினதும் இயல்பு வாழ்க்கை சீர்குலைந்துள்ளது. அரசாங்கம் என்னதான் நம்பிக்கையளிக்கும் வாக்குறுதிகளை வழங்கினாலும் நிலைமை வழமைக்குத் திரும்ப பல ஆண்டுகள் பிடிக்கலாம் எனக் கருதப்படுகிறது. அதைவிட மோசமான நிலைமை என்னவெனில், மேலும் பல பயங்கரவாதத் தாக்குதல்கள் நடக்கலாம் என்ற நிலை இருப்பதுதான்.

ஏப்ரல் 21 தாக்குதலைத் தொடர்ந்து



ஆயுதப்படையினர் நாடு முழுவதும் மேற்கொண்ட தேடுதல்களில் துப்பாக்கிகள், வெடிமருந்துகள், வாள்கள், சீருடைகள், பிரச்சார இறுவட்டுகள் என பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் தொகையைப் பார்க்கும்போது, இலங்கை மேலும் எத்தகைய அபாயங்களை எதிர்நோக்கி இருந்திருக்கிறது என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சிலர் படையினரின் சுற்றிவளைப்பின் போது தம்மைத்தாமே மாய்த்துக் கொண்டுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் பல ஆயுதங்கள் கைப்பற்றப்படுவதோடு, பலர் கைது செய்யப்படலாம் என்ற நிலை தொடர்கின்றது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கையையும், பயங்கரவாதிகள் பயன்படுத்திய பயற்சி முகாம்கள், அவர்களுக்கு நிதி வழங்கியோர், அவர்கள் பயன்படுத்திய அதிநவீன ஆயுதங்கள் என்பவற்றைப் பார்க்கும்போது, எவ்வளவு மிகப்பெரிய திட்டங்களை அவர்கள் வைத்திருந்திருக்கிறார்கள் என்பதை அனுமானிக்க முடிகிறது.

அதேவேளை, இத்தகைய மிகப்பெரிய செயல்பாடுகளும், ஆயுதக் குவியல்களும் பாதுகாப்புத் தரப்பினருக்கு எவ்வாறு தெரியாமல் போனது என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுவது நியாயமானது. இதில் எங்கேயோ சதித்திட்டம் ஒன்று மறைவாகச் செயல்பட்டுள்ளது என்பது புலனாகின்றது.

தற்போது வெளிவரும் தகவல்களைப் பார்த்தால் இந்தத் தாக்குதல்களுடன் அரச அதிகாரத்தில் இருக்கும், குறிப்பாக

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# அமெரிக்காவின் யுத்த மிரட்டல்களுக்கு அடிபணியாத ஈரான்

ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையேயான பதற்றம் சமீப காலமாக அதிகரித்து வருகின்றது. இம்மாதம் நடுப்பகுதியில் வளைகுடா நாடுகளுக்கு ஏவுகணை அமைப்புகளையும், போர்க் கப்பலையும் அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளதோடு மேலும் 120000 துருப்புக்களை நிலைநிறுத்த ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. வளைகுடாப் பகுதியில் உள்ள அமெரிக்க இராணுவம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சுறுத்தல் எழுந்திருப்பதால், ட்ரம்ப் நிர்வாகம் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் படைகளைக் குவித்து, மத்திய கிழக்கில் பதற்றத்தை ஏற்படுத்தி, தம்மீது போர் தொடுப்பதற்கு அமெரிக்கா திட்டமிடுவதாக ஈரான் குற்றஞ்சாட்டி வருகின்றது.

அமெரிக்க ஜனாதிபதியாகத் தீவிர இஸ்லாமிய எதிர்ப்பாளர், ரொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர் மத்திய கிழக்கின் நிலைமைகள் நாளுக்கு நாள் படுமோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. இதற்கு சவூதி அரேபியா தலைமையில் பெரும்பாலான சுன்னி முஸ்லீம் அரபு நாடுகளும் முழு ஒத்துழைப்பை வழங்குவது என்பதுதான் பெரும் முரண் நகை.

1979 ஆம் ஆண்டு ஈரானில் நடந்த புரட்சிக்கு பிறகு ஈரான் தனது அணுசக்தி ஆற்றலை விரிவாக்க முடிவு செய்தது. இந்த ஈரானியப் புரட்சி மூலம் அமெரிக்காவின் கைப்பொம்மையாகச் செயற்பட்ட மொஹமட் ரேசா ஷா (Mohammad Reza Shah) என்று அழைக்கப்பட்ட மொஹமட் ரேசா பஹ்லவி (Mohammad Reza Pahlavi) என்பவரின் சர்வாதிகார ஆட்சி அகற்றப்பட்டது. ஷா ஆட்சியிலிருக்கும் வரை, அதாவது 1979 க்கு முன்புவரை ஈரானின் அணுசக்தி அறிவியல் வளர்ச்சிக்கு அமெரிக்கா பெரிதும் உதவி புரிந்துள்ளது என்பது பலருக்கும் தெரியாத விடயம்.

1984 இல் சீனாவின் உதவியுடன் அணுக்கரு ஆராய்ச்சி நிலையமொன்றினை ஈரான் நிறுவியது. அமெரிக்கா 2000 இல், ஈரானின் அணுசக்தி வளர்ச்சிக்கு உதவி செய்யக்கூடாது என்று பிற நாடுகள் மீது தடை விதித்தது. அதன் பின்னரும் ஈரான் மேலும் சில அணு உலைகளை நிறுவி, தாங்கள் ஆயுதம் தயாரிக்கவில்லை என்றும், ஆராய்ச்சிக்காகவும், ஆற்றலுக்காகவும் மட்டுமே அணு உலைகளை அமைப்பதாக தெரிவித்தது.

ஈரானின் அணு உலைகளைச் சுற்றி யுரேனியம் செறிவு இருப்பதாக சர்வதேச அணுசக்தி கழகம் (IAEA) ஆராய்ச்சி செய்து வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து, 2007 இல் ஐக்கிய நாடுகள் சபை ஈரான் மீது முழுப் பொருளாதார தடையை விதித்தது. இந்தப் பொருளாதாரத் தடையால் ஈரான் மிகவும் பாதிக்கப்பட்டது. அதனால் அணு உலைகளை பார்வையிட IAEA இற்கு அழைப்பு விடுத்தது. அதனைத் தொடர்ந்தே, 2015 ஆம் ஆண்டு சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, பிரத்தானியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியனுடன், அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வழிநடத்த, ஈரான் ஒப்பந்தமொன்றினைக் கைச்சாத்திட்டது. இந்த ஒப்பந்தம் ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் அல்லது Joint comprehensive plan of action (JCPOA) எனப்படுகின்றது.

அந்த ஒப்பந்தத்தின்படி ஈரான் தன்னிடம் உள்ள அனைத்து அணு ஆயுத மூலங்களையும் அழித்துவிட வேண்டும், யுரேனியம் ஹெக்ஸா∴புளூரைடாக (Uranium hexafluoride) மாற்றிவிட வேண்டும் அல்லது வேறு நாடுகளுக்கு விற்றுவிட வேண்டும். மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற ஆராய்ச்சியில் ஈடுபடவே கூடாது போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அணுக்கழிவான புளூட்டோனியத்தை (Plutonium) ஈரான் கட்டாயமாக நாட்டைவிட்டு அகற்ற வேண்டும். (அணுமின் உலையில் நடைபெறும் அணுக்கரு பிளவின் போது கிடைப்பவை தான் இந்த புளூட்டோனியம்) ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச அணுசக்திக் கழகம் ஆகியன ஈரானுக்கு உள்நுழைந்து எப்போது வேண்டுமானாலும் அணு நிலையங்களை சோதனை செய்து கொள்ளலாம். பதிலுக்கு, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படுமெனவும் ஈரானில் மேற்கூறிய நாடுகள் முதலீடு செய்யத் தொடங்கும் எனவும் ஈரானுக்கு உறுதி மொழிகள் வழங்கப்பட்டன.

ஒப்பந்தத்தின் பிரகாரம் ஈரான் நடக்கத் தொடங்கிய பின்னர், ஈரானின் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் படிப்படியாக அகற்றப்பட்டன. பின்னர் அவ்வப்போது IAEA அதிகாரிகள் ஈரானுக்குச் சென்று, சோதனைகள் மேற்கொண்டு ஈரானுக்கு நன்னடத்தை பத்திரத்தை அளித்து வந்தனர். தடைகள் நீங்கிய பின்னர் 28 நாடுகளில் முடக்கி வைக்கப்பட்டிருந்த ஈரானுக்கு சொந்தமான 100 பில்லியனுக்கும் மேற்பட்ட அமெரிக்க டொலர்களை ஈரான் வங்கிகள் கையாளத் தொடங்கின. மேலும் ஐரோப்பிய நிறுவனங்கள் பல ஈரான் சந்தையில் முதலீடுகளும் செய்ய ஆரம்பித்தன.

எனினும் இந்த ஒப்பந்தத்தை சவூதி அரேபியாவும் இஸ்ரேலும் ஏற்றுக்கொள்ள மறுத்தன. ஈரான் ஷியா முஸ்லீம்களின் நாடு என்பதால், சுன்னி முஸ்லீம் நாடான சவூதி அரேபியா, ஈரான் மத்திய கிழக்கில் பொருளாதாரம் மற்றும் இராணுவ ரீதியாகவலிமை பொருந்தியதொரு நாடாக உருவாகுவதை ஆபத்தானதாகப் பார்க்கின்றது. இஸ்ரேலோ மத்திய கிழக்கில் உள்ள எந்தவொரு முஸ்லீம் நாடும் தன்னை மிஞ்சி வளருவதை ஒருபோதும் அனுமதிக்காது. அதனால் அணு ஆயுத விடயத்தில் ஈரானை ஒருபோதும் நம்பக்கூடாது என்றே இந்த இரண்டு நாடுகளும் பிரச்சாரம் செய்து வருகின்றன. ஆனால் IAEA இன் தொடர் சோதனைகளில், ஈரான் JCPOA ஒப்பந்தத்தை மதித்து நடப்பது நிரூபணமானது. இந்த காலகட்டத்தில்தான் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றார். ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போதே ஈரானுடனான ஒப்பந்தத்தை விமர்சித்தும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஒபாமாவை இகழ்ந்தும் பேசி வந்தார், ட்ரம்ப்.

2015 இல் ஒபாமா முன் நின்று போட்ட அணு ஆயுத ஒப்பந்தத்தை, ட்ரம்ப் ஒருதலைபட்சமாக எந்தக் காரணமும் முன்வைக்காமல் 2018 இல் முறித்துக் கொள்வதாக அறிவித்ததோடு, ஈரான் மீது பொருளாதார தடைகளையும் விதித்தார். ஈரானிடமிருந்து எந்த நாடும் எண்ணெய் வாங்கக் கூடாது, மீறினால் அந்த நாடுகள் மீதும் பொருளாதார தடை கொண்டுவரப்படும் என்றும் எச்சரித்தார். மேலும் ஈரானின் இஸ்லாமியப் புரட்சி பாதுகாப்பு படையினைச் சர்வதேச தீவிரவாதப் படையாக அமெரிக்கா அறிவித்தது.

வடகொரியாவின் இடைவிடாத அணுகுண்டு மற்றும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைப் பரிசோதனைகளால் சீற்றமிழந்து விட்டதாக அமெரிக்கா முதலில் உலகிற்கு காட்டிக் கொண்டது. வடகொரியா மீது பகிரங்கமாக நேரடி எச்சரிக்கைகளை விட்டு, யுத்தமொன்றை மேற்கொள்ளப் போவது மாதிரியான சூழலொன்றைத் தோற்றுவித்தது. வடகொரியா எதற்கும் அசையவில்லை. பின்னர், இதுவரையில் நடந்தது என்ன? இரு தடவைகள் வடகொரிய அதிபருடன் நேரடியாக ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். ஏனெனில் வடகொரியாவுடன் யுத்தமொன்றைத் தொடுப்பது என்பது இரு பக்கத்தாருக்கும் பாரிய அழிவொன்றினை ஏற்படுத்தும் என்பதை அமெரிக்கா நன்கே தெரிந்து வைத்துள்ளது. இது போன்றே ஈரானுடனான யுத்தம் என்பதும் மத்திய கிழக்கினை சுடுகாடாக்கும் என்பதிலும் அமெரிக்கா தெளிவாகவே உள்ளது.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

**வானவில்**

# ஒட்டாவா வெனிசூலாவின் எதிர்க்கட்சியை தவறாக ஆதரிக்கின்றது

**வெ**னிசூலா நெருக்கடியில் கனடா ஒரு பாசாங்குத்தனமான விளையாட்டை விளையாடுகிறது. லிபரல் அரசாங்கம் வன்முறையைத் தவிர்க்க விரும்புவதாகக் கூறுகின்றது. ஆனால் அதேநேரத்தில் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் (Nicolas Maduro) அரசாங்கத்துக்கு எதிராக ஒரு சதியை நிகழ்த்தும்படி வெனிசூலா இராணுவத்துக்கு வேண்டுகோள் விடுக்கின்றது.

14 அங்கத்துவ நாடுகள் கொண்ட லீமா குழுவிலுள்ள கனடா உட்பட 10 நாடுகள் மதுரோவுக்கும் அவரது போட்டியாளரான, தன்னைத்தானே ஜனாதிபதியாக அறிவித்துக்கொண்ட ஜூவான் குவாய்டோவுக்கும் (Juan Guaido) இடையில் பேச்சுவார்த்தை நடத்தும்படி ஐக்கிய நாடுகள் சபை விடுத்த வேண்டுகோளை நிராகரித்துள்ளன. அவைகள் ஒட்டவாவிலிருந்து விடுத்த ஓர் அறிக்கையில் பேச்சுவார்த்தைகளை மதுரோ காலம் கடத்தும் தந்திரோபாயமாகப் பயன்படுத்துவார் என அச்சம் தெரிவித்துள்ளன.

“நடவடிக்கைக்கான நேரம் இதுவே. மேலும் பயனற்ற பேச்சுவார்த்தைகள் தேவையில்லை” என பெருவிய வெளிவிவகார அமைச்சர் நெஸ்ரர் பொபோலிஸியோ (Nestor Popolizio) நிருபர்களிடம் கூறியுள்ளார்.

கனடா, ஆர்ஜன்ரீனா, பிரேசில், சிலி, கொலம்பியா, கோஸ்ரா றிக்கா, கௌதமாலா, ஹொண்டுராஸ், பனாமா, பரகுவே, பெரு ஆகிய 11 நாடுகள் வெனிசூலாவின் இராணுவத்தை கலகம் செய்யும்படியும், குவாய்டோவுக்கு ஆதரவளிக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளன. குறிப்பாக, எல்லையில் நிற்கும்படியும், வெனிசூலாவுக்கு வரும் “மனிதாபிமான உதவிகளை” அனுமதிக்கும்படியும் அவை இராணுவத்திடம் கேட்டுள்ளன. இந்த வகையான 53 மில்லியன் டொலர் பெறுமதியான உதவியை வழங்கவிருப்பதாக கனடா அறிவித்துள்ளது.

கயானா மற்றும் சென்ற்லூசியா என்பன இந்த அறிக்கையில் கையெழுத்திடவில்லை. 14 அங்கத்துவ நாடுகள் கொண்ட லீமா குழுவிலுள்ள



**தோமஸ் வொல்கொம்**
(Thomas Walkom)

மெக்சிக்கோ, மதுரோவை வெனிசூலாவின் சட்டபூர்வமான ஜனாதிபதியாக ஏற்றுக் கொண்டுள்ளதுடன், ஒட்டாவா உச்சி மகாநாட்டில் பங்குபற்றவுமில்லை. லத்தீன் அமெரிக்காவில் தூண்டிவிடப்பட்ட இராணுவச் சதிகள் பற்றி நன்கறிந்துள்ளதால் லீமா குழு அமெரிக்காவிடமிருந்து தூரவிலகி நிற்கவே விரும்புகிறது. ஆனால் ஒரு அமெரிக்க அதிகாரி ஒட்டாவா கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார். அத்துடன், அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ (Mike Pompeo) தொலைக்காட்சி மூலம் கூட்டத்தினருக்கு உரை நிகழ்த்தியுள்ளார். அமெரிக்கா நீண்டகாலமாக வெனிசூலாவின் சோசலிச ஜனாதிபதியை நீக்குவதற்கு முயன்று வருகிறது.

மதுரோவை அகற்றுவதற்கு கனடா முன்வைக்கும் நியாயவாதம் பலவீனமானது. கடந்த மே மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மதுரோ மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது சட்டவிரோதமானது என கனடாவின் வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரியா ஃபிறிலான்ட் (Chrystia Freeland) வாதிடுகிறார். எனவே, வெனிசூலாவின் அரசியல் சாசனத்தின்படி ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ளது எனக் கூறுகிறார்.

அந்த அரசியல் சாசனப்படி, தேசிய சபையின் தலைவர் – இப்பொழுது அமெரிக்கா தேர்ந்தெடுத்துள்ள குவாய்டோ – அந்த இடத்துக்கு உரியவராகிறார். ஜனாதிபதி பதவி காலியாகியுள்ளது என்ற வாதம் ஆழமான அரசியல் கேள்வியை எழுப்பியுள்ளது. 2018 இல் பெரும்பான்மையானவர்கள் மதுரோவுக்கு வாக்களித்ததால் அவரே ஜனாதிபதி என்றும், எனவே ஜனாதிபதி பதவி காலியாகவில்லை எனவும், மதுரோ ஆதரவாளர்கள் கூறுகின்றனர். மதுரோ ஒரு அபகரிப்பாளர் என்றும், அவரது பதவி வெற்றிடத்தை குவாய்டோவினால் மட்டுமே சட்டப்படி நிரப்ப முடியும் எனவும் அவருடைய எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.

2018 இல் மதுரோ மீண்டும் தெரிவானதில் குறைபாடுள்ளதால் அந்த முடிவு சட்டவிரோதமானதா? அது யார் பேசுகிறார்கள் என்பதில் தங்கியுள்ளது. மதுரோவை எதிர்ப்பதற்காக 2017 இல் உருவாக்கப்பட்ட லீமா குழு, தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே தேர்தல் முடிவு மோசடித்தனமானது என அறிவித்துவிட்டது. இதை அவர்கள் இரண்டு அடிப்படையில் கூறுகிறார்கள்.

முதலாவது, குவாய்டோவின் Popular Will Party தலைவரான லியோபோல்டோ லொபிஸ் (Leopoldo Lopez) உட்பட மிகவும் பிரபலமான எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடுவது தடை செய்யப்பட்டது. லொபிஸ் 2014 இல் நடைபெற்ற வீதி ஆர்ப்பாட்ட கலவரங்களில் 43 பேர் கொல்லப்பட்டதில் அவரது பங்களிப்பு காரணமாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது, முக்கியமான எதிர்க்கட்சிகள் தேர்தலைப் பகிஸ்கரிக்கக் கோரியிருந்தமை.

எப்படியிருந்தபோதிலும், தம்மைப் பொறுத்தவரை தேர்தல் குழப்பமேதுமின்றி நடைபெற்றதாக மதுரோவின் ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். லத்தீன் அமெரிக்காவின் ஏனைய பகுதிகளிலிருந்து வந்த தேர்தல் கண்காணிப்பாளர்கள் தேர்தல் நியாயமாக நடைபெற்றதாகக் கூறுகின்றனர். ஆறுபேர் கொண்ட கனடிய தேர்தல் கண்காணிப்புக் குழுவில் Unifor, the United Church, the Canadian Union of Postal Workers, the Ontario Secondary School Teachers' Federation, the news site rabble.ca and

the leftish working group Frontiers என்ற அமைப்புகள் இடம் பெற்றிருந்தன.

"ஒரு வெளிப்படையான, பாதுகாப்பான, ஜனநாயகரீதியிலான, ஒழுங்கு முறைப்படியான வாக்களிப்பு நடைபெற்றதற்கு நாங்கள் சாட்சி…. வாக்களித்த பெரும்பான்மையான வெனிசூலர்களின் விருப்பத்தை தேர்தல் முடிவுகள் பிரதிபலித்ததை உணரக்கூடியதாக இருந்தது" என கனடிய கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

வெனிசூலாவின் வாக்களிக்கத் தகுதி பெற்ற மக்களில் 46 வீதத்தினர் – முன்னைய ஜனாதிபதி தேர்தலை விட சற்றுக் குறைவானோர் – இத்தேர்தலில் வாக்களித்துள்ளனர். தற்போதைய நெருக்கடியின் பின்புலம் இதுதான். இது போதுமா கனடா சதி முயற்சியில் சம்பந்தப்படுவதை நியாயப்படுத்துவதற்கு? கனடிய தொழிற்சங்க காங்கிரஸ் (Canadian Labour Congress) மற்றும் சில தொழிற்சங்கங்கள் அவ்வாறு நினைக்கவில்லை. கனடிய தொழிற்சங்க காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில், "ஒரு சுயாதிபத்தியமுள்ள நாட்டின் ஜனநாயக விடயங்களில் சர்வதேச தலையீடு செய்வது அத்துமீறல் என எச்சரிப்பதுடன், இந்த நெருக்கடிக்கு இராணுவத் தீர்வு காண முயல்வதை வன்மையாக நிராகரிப்பதாகவும்" தெரிவித்துள்ளது.

அத்துடன், "கனடா, வெனிசூலாவின் சுயாதீனத்தில் தலையிடுவதினின்றும், அங்கு ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதற்கான முயற்சியினின்றும் விலகி நிற்க வேண்டும்" எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

புத்திசாதுரியமான வார்த்தைகள். ஓட்டாவா இதற்கு செவிமடுக்காமல் விடுவது நல்லதல்ல.

(தோமஸ் வொல்கொம் கனடாவின் ரொறன்ரோ நகரில் வாழ்பவரும், அந்நாட்டில் வெளியாகும் 'ரொறன்ரோ ஸ்ரார்' [Toronto Star] பத்திரிகையின் கிரமமான பத்தி எழுத்தாளருமாவார். இக்கட்டுரை அப்பத்திரிகையில் இருந்து எடுக்கப்பட்டதாகும்)

# இலங்கையை அமெரிக்க நவ காலனியாக மாற்றுவதே ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்களின் நோக்கம்!

## லங்கா சமசமாஜக் கட்சி கூறுகிறது

**இலங்கையில் ஈஸ்டர் தினத்தன்று (ஏப்ரல் 21 ஆம் திகதி) இஸ்லாமிய பயங்கரவாதிகள் சிலரால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் குறித்து லங்கா சமசமாஜக் கட்சி பின்வரும் அறிக்கையை விடுத்திருக்கிறது:**

இந்த தாக்குதல் குறித்து குற்றப் புலனாய்வுப்பிரிவின் பிரதிப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டு அவர் (அதிமுக்கியஸ்தர்கள் உட்பட) சம்பந்தப்பட்ட பாதுகாப்பு உத்தியோகர்களுக்கு அறிவித்திருந்தார். ஏப்ரல் 11 ஆம் திகதியிட்ட கடிதத்தில் தாக்குதலுக்கான திகதி பற்றியும், தாக்கப்படபோகும் இலக்குகள் குறித்தும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தகவல் கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்களுக்கோ, தாக்குதலுக்குள்ளான ஹோட்டல் நிர்வாகிகளுக்கோ அறிவிக்கப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தால் உயிர் இழப்புகளையும் சேதங்களையும் தவிர்த்திருக்க முடியும். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இதுபற்றி தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று கூறுகின்றது. ஆனால் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, நவலோகா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த தனது தகப்பனார் மூலம் இது பற்றி முன்னரே தான் அறிந்திருந்தாகவும், அதனால் தான் அன்றைய காலை பிரார்த்தனை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமல் தவிர்த்ததாகவும் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினால் உத்தியோகபூர்வ தகவல் வழங்கப்பட்டிருக்காவிடினும் அவர் இந்த விடயத்தை பிரதமருக்கோ அமைச்சரவைக்கோ ஏன் தெரிவிக்கவில்லை?

அரசாங்கத்துக்கு இது தெரியுமென்பது தெளிவான விடயமாகையால் அது நிச்சயமாக கண்டிக்கப்பட வேண்டும். கேள்வி என்னவென்றால், அது ஏன் முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கையை எடுக்கவில்லை. புலிகள் இல்லாத சூழலில் இஸ்லாமிய மற்றும் ஏனைய மத சமூகங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தி, 1983 கறுப்பு யூலையில் அரங்கேற்றியது போன்ற ஒரு நிகழ்வை அரங்கேற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டு இருந்ததையே இது காட்டுகிறது. மக்களின் கோபத்துக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் தேர்தல்கள் நடத்துவதை சாத்தியமற்றதாக்குவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இந்த முழு தாக்குதல்களும் அமெரிக்காவின் சிஐஏ காரணம் காட்டும் வெளிநாட்டில் நடைபெற்ற சம்பவங்களுடன் ஒத்த மாதிரியைக் கொண்டுள்ளன. அமெரிக்காவினதும் அதன் சிஐஏவினதும் சிந்னைக்குழாம் அரசாங்கத்தின் உதவியுடன் இங்கு செயற்படுவது நன்கு தெரிந்த விடயம். தேர்தல்களை நடத்தாமல், கொடூரமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் உதவியுடன் பொலிஸ் இராஜ்யம் ஒன்றை உருவாக்கி, எவ்வித இடையூறுமின்றி இலங்கையை அமெரிக்காவின் நவ காலனியாக மாற்றுவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைத் தொடர்வதற்கான முயற்சியே இத்தாக்குதலின் பின்னணியாகும்.

# நீதி எங்கே? நியாயம் எங்கே?

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஐக்கிய அரபு இராஜ்யத்தில் கைது செய்யப்பட்ட பாதாள உலகத் தலைவன் மகந்துர மதூசையும் அவனது சகாக்களையும் விடுவிப்பதற்காக சட்டத்தரணிகள் உட்பட பலர் இலங்கையிலிருந்து எமிரேட்ஸ் பறந்து சென்றனர். அவனை விடுவிப்பதற்கு இலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் பலரும் கூட முயற்சியில் இறங்கினர்.

ஆனால், 2013 இல் மூதூரைச் சேர்ந்த றிசானா நபீக் என்ற ஏழைச் சிறுமிக்கு சவூதி அரேபியாவில் பகிரங்கமாக மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பொழுது இலங்கையிலிருந்து இந்த 'தர்மவான்கள்' யாருமே ஒரு ஆதரவுக் குரல் கூடக் கொடுக்கவில்லை.

றிசானா நபீக் சவூதி அரேபியாவில் பணி புரிந்த வீட்டு உரிமையாளரின் நான்கு மாதக் குழந்தையினை 2005ஆம் ஆண்டு கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு, நீண்ட காலமாக அந்நாட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டு, பின்னர் மரணதண்டனை விதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பணமும் அதிகாரமும் உள்ளவர்களுக்குத்தான் இந்த 'மனிதர்கள்' ஆதரவு கொடுப்பார்கள் என்பதை இந்த இரண்டு சம்பவங்களையும் ஒப்பிடும் போது புரிந்து கொள்ளலாம்.

– இத்ரீஸ்

# எரியிற வீட்டிலை புடுங்கிறது இலாபம் என நினைக்கும் அரசாங்கம்!

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களால் பலர் உயிரிழந்தும், ஏராளமானோர் காயமடைந்தும் உள்ள நிலையில், நாட்டு மக்கள் மத்தியில் பெரும் சோகமும் பயமும் கலந்த ஒரு சூழல் நிலவுகின்றது.


குறிப்பாக, "இது முடிவல்ல, தொடக்கம்" என ஐ.எஸ். அமைப்பு அறிவித்துள்ள நிலையில், இலங்கையில் மட்டுமின்றி உலகம் முழுவதும் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

அத்துடன், இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதல் சிரியாவில் ஐ.எஸ். அமைப்புக்கு ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி என்று ஐ.எஸ். தலைவர் அறிவித்துள்ள நிலையிலும், அண்மையில் நியுசிலாந்தில் இரு பள்ளிவாயல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடி என்றும் செய்திகள் வரும் சூழ்நிலையில், இந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் உலகின் எந்த மூலையிலும் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என்ற சூழல் நிலவுகின்றது.

இதிலிருந்து ஒரு உண்மை தெளிவாகின்றது. அதாவது, பயங்கரவாதிகள் ஒரு நாட்டுக்குள் வரையறுக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் நாடு கடந்தவர்கள். அவர்கள் உலகம் முழுவதும் செயற்படுவதுடன், எங்கும் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தக்கூடிய வல்லமையுடனும் இருக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில், இலங்கையில் இருக்கின்ற அனைத்து இனங்களையும் சேர்ந்த மக்கள் மிகுந்த ஒற்றுமையுடனும், விழிப்புடனும் இருக்க வேண்டிய தருணம் இது. ஆனால் இலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் ஏற்பட்ட பேரழிவைப் பற்றி எந்தக் கவலையும் இன்றி ஆளையாள் குற்றஞ்சாட்டுவதிலும், ஆளுக்காள் சேறு பூசுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, ஆட்சியில் உள்ள அரசாங்கம் தனக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களை ஊதாசீனம் செய்து இந்தப் பேரழிவுக்கு மறைமுகமாக உதவியது என்ற வகையில் ஒட்டுமொத்தமாக பதவி விலகி இருக்க வேண்டும். ஆனால் அரசு அவ்விதம்



செய்யாதது மட்டுமின்றி, இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி தனது ஆட்சியதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் கைங்கரியங்களில் ஈடுபட்டு வருகின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு அதன் இடத்தில் அதைவிட மிகவும் மோசமான சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு எத்தனித்து வரும் இன்றைய அரசாங்கம், தற்போது நடைபெற்றுள்ள குண்டுத் தாக்குதல்களை அதற்குச் சாதகமாகப் பயன்படுத்த எத்தனிக்கிறது.

## புனிதன்

இந்தக் குண்டுத் தாக்குதல்கள் பற்றி கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புதிய பயங்கரவாத தடைச் சட்டம் ஏற்கெனவே அமுலில் இருந்திருந்தால் இந்தத் தாக்குதல்களைத் தடுத்திருக்க முடியும் எனக் கூறியிருப்பது அரசின் அந்தரங்க நோக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. இது அவர் புதிய சட்டத்தை இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்த எப்படியாவது கொண்டு வந்துவிட வேண்டும் என்ற திட்டத்தில் இருப்பதை வெளிப்படுத்துகிறது. ஆனால் புதிய சட்டம் இருந்தால் எப்படி அது பயங்கரவாதிகளின் செயற்பாட்டைத் தடுத்திருக்கும் என்று கேட்டால் அவரால் பதிலளிக்க முடியாது.

ஏனெனில், எந்தவொரு சட்டமும் செயற்பாடு நடந்தபின் அதைச் செய்தவரைத் தண்டிக்க உதவுமே தவிர, அதைச் செய்வதற்கு முன் அதனால் அதைத் தடுத்துவிட முடியாது.

பிரதமரின் இந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டதால் போலும், கொழும்பு மாவட்ட பேராயர் மதிப்புக்குரிய மல்கம் ரஞ்சித் அவர்கள், "புதிய சட்டம் எதற்காக? தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்து பயன்படுத்தலாமே?" எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

இந்த விவகாரம் ஒருபுறமிருக்க, ஐ.தே.க. அரசாங்கம் இன்னுமோரு விடயத்திலும் அந்தரங்க நோக்கத்துடன் செயற்படுவதைக் காண முடிகிறது. அதாவது, முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிக்க முற்படுகிறது. அவரை அந்தப் பதவிக்கு நியமிப்பதில் ரணில் அரசு ஏன் அக்கறை காட்டுகிறது என்பது புரியாத விடயமல்ல.

2009 இல் போர் முடிவுக்கு வந்தபின்னர், போரில் அரசு வெற்றியீட்டுவதற்கு காரணமாக இருந்த அரசியல் தலைமையையும், உண்மையான இராணுவத் தலைமையையும் இருட்டடிப்புச் செய்து, பொன்சேகாவே போரின் வெற்றிக்கு முழுக் காரணமானவர் என்ற ஒரு

பிரச்சாரத்தை முன்னெடுத்து, அவரை 2010 ஜனாதிபதி தேர்தலில் போது வேட்பாளராக நிறுத்தியது ஐ.தே.க. போரால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதியான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஆதரித்தும் கூட பொன்சேகா தோற்றுப்போனார்.

அதன் பின்னர் தனிக்கட்சி தொடங்கி தேர்தலில் போட்டியிட்ட பொன்சேகா, பின்னர் தனது கட்சியைக் கலைத்துவிட்டு ஐ.தே.கவில் சங்கமமாகிவிட்டார். அதன் பின்னர் எதிர்க்கட்சியினரைத் துரத்தும் வேட்டை நாயாக பொன்சேகா ஐ.தே.கவினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றார். எமற்கெடுத்தாலும் ராஜபக்ச குடும்பத்தைக் கடித்துக் குதறுவதையே பொன்சேகா தனது தொழிலாகச் செய்து வருகின்றார்.

இந்தச் சூழ்நிலையில் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமித்தால் அவர் எதிர்க்கட்சியினரை கூடுதலான பலத்துடன் வேட்டையாடுவார் என்பதுதான் ஐ.தே.கவின் திட்டம். அதை மறைத்து பொன்சேகா அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால், பயங்கரவாதத்தை கொஞ்ச நாட்களில் நாட்டிலிருந்து விரட்டியத்துவிடுவார் என சால்ஜாப்பு காட்டுகிறது அரசாங்கம்.

ஆனால் அவரோ தான் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால் இரண்டு வருடங்களில் நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்து விடுவதாகத் தன் கையாலாகாத்தனத்தை பறைசாற்றி நிற்கிறார்.

இப்பொழுது நமது நாட்டு மக்கள் இரண்டு விதமான பயங்கரவாதத்தை எதிர்நோக்கி நிற்கின்றனர். ஒன்று, வெளிநாட்டு அதரவுடன் செயற்பட்டு வரும் மதப் பயங்கரவாதம். இன்னொன்று, ஐ.தே.க. அரசால் நாட்டு மக்கள் மேல் கட்டவிழ்த்துவிடப்போகும் அரச பயங்கரவாதம். இரண்டுமே மக்களுக்கு நாசம் விளைவிக்கக் கூடியவை. இதில் அரச பயங்கரவாதம் கூடுதலான நாசத்தை விளைவிக்கக் கூடியது.

ஏனெனில், வெளியில் இருப்பவன் செய்யும் அநீதியை விட ஆட்சியில் இருப்பவன் செய்யும் அநீதி ஆபத்தானது.

# உடல்நலக் குறிப்புகள்

## சர்க்கரை நோயாளிகள் பழங்கள் சாப்பிடலாமா?

பழங்களில் நிறைய அத்தியாவசியமான சத்துகள் இருக்கின்றன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம். ஆனால் சர்க்கரை நோயாளிகள் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு உணவுப்பொருளிலும் 'கிளைசெமிக் இன்டெக்ஸ்' எவ்வளவு இருக்கிறது என்று ஒரு கணக்கு இருக்கிறது. இதைச் சர்க்கரை நோயாளிகள் கட்டாயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மருத்துவர்களிடம் கேட்டால் அச்சிடப்பட்ட அட்டவணையே தருவார்கள். எந்த உணவுப்பொருட்களில் எல்லாம் 55 என்ற அளவுக்குக் கீழே 'கிளைசெமிக் இன்டெக்ஸ்' இருக்கிறதோ அவற்றையெல்லாம் சர்க்கரை நோயாளிகள் சாப்பிடலாம். பழங்களுக்கும் இது பொருந்தும். பொதுவாக, எலுமிச்சை, ஸ்ட்ராபெர்ரி, ஆரஞ்சு, ஆப்பிள், வாழைப்பழம் போன்ற பழங்களைச் சாப்பிடலாம். ஆனால் அளவைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 100 கிராம் ஆப்பிளில், 'கிளைசெமிக் இன்டெக்ஸ்' 60 உள்ளது. சர்க்கரை நோயாளிகள் பாதி ஆப்பிள் சாப்பிடலாம். இதுவும், சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும். பேரீச்சை, திராட்சை, அத்திப்பழம், உலர் திராட்சை போன்றவற்றில் 120 க்கு மேல் கிளைசெமிக் இன்டெக்ஸ் இருக்கிறது. இவற்றை முற்றிலும் தவிர்த்து விடுவது நல்லது. சர்க்கரை நோயுடன் சிறுநீரகக்கோளாறும் இருப்பவர்கள் பழங்கள் சாப்பிடுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

– சர்க்கரை நோய் மருத்துவர் சிபி. ராஜ்குமார்

## தேங்காய் நல்லதா கேட்டதா?

தேங்காயில் புரதம், இரும்புச்சத்து உட்பட பல்வேறு ஊட்டச்சத்துகளும், சோடியம், பொட்டாசியம் போன்ற அத்தியாவசிய தாதுகளும் நிறைந்திருக்கின்றன. வாய்ப்புண், அல்சர், வயிற்றுக்கோளாறுகளை குணமாக்கும் தன்மையும் தேங்காய்க்கு உண்டு. அதேநேரத்தில், தேங்காயில் எல்.டி.எல். எனப்படும் கெட்ட கொழுப்பும், ஹெச்.டி.எல். எனப்படும் நல்ல கொழுப்பும் இருக்கின்றன. உடல் பருமன், இதயப் பிரச்சினைகள் இருப்பவர்களுக்கு தேங்காய் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தலாம். மற்றவர்கள் எல்லோரும் தாராளமாக தேங்காயைச் சேர்த்துக் கொள்ளலாம். தேங்காயில் உள்ள நார்ச்சத்து செரிமானத்துக்கு உதவும். பால் எடுத்தோ, எண்ணெய் எடுத்தோ பயன்படுத்தும்போது நார்ச்சத்து நீங்கிவிடும். கொழுப்பு அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது.

– இந்தியாவின் மூத்த உணவியல் நிபுணர்களில் ஒருவரான குந்தனா ரவி

## சாப்பிட்டவுடன் டீ, கோபி அருந்தலாமா?

காலையில் சிற்றுண்டி சாப்பிட்டவுடன் சிலருக்குச் சூடாக ஒரு கோபி குடித்தே ஆகவேண்டும். அதேபோல மதிய உணவு சாப்பிட்டு முடித்ததும் செரிமானத்துக்காக சிலர் டீ குடிப்பார்கள். உண்மையில் இது நல்லதல்ல. கோபி, டீ இரண்டிலுமே 'கஃபைன்' என்ற வேதிப்பொருள் இருக்கிறது. அது போதைப்பொருள் போலச் செயல்படக்கூடியது. சாப்பிட்டு முடித்ததும் உணவில் இருக்கின்ற சத்துகளை நமது உடல் கிரகிக்க ஆரம்பிக்கும். அந்த நேரத்தில் டீ, கோபி குடித்தால் அவற்றில் இருக்கின்ற கபைன், இந்த செயல்பாட்டைத் தடுத்துவிடும். உதாரணமாக, கீரையில் இரும்புச்சத்து நிறைய இருக்கிறது. கீரை சாப்பிட்டவுடன் டீயோ, கோப்பியோ அருந்தினால், கீரையில் இருக்கின்ற இரும்புச்சத்து உடலில் சேராது. ஆதனால் சாப்பிட்டவுடனே டீ, கோபி குடிப்பதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். குறைந்தது இரண்டு மணிநேர இடைவெளியாவது இருக்க வேண்டும். அதிகாலை, மாலை நேரங்களில் டீ, கோபி குடிப்பதில் பிரச்சினையில்லை. மற்ற நேரங்களில் தவிர்த்துவிடுவதே நல்லது.

– இந்திய உணவியல் நிபுணர் நிஷா

நன்றி: ஆனந்தவிகடன்

# இலங்கையில் அமெரிக்கா குதிரையை மாற்றத் தீர்மானித்துவிட்டதா?

'**யா**னை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்று சொல்வார்கள். அரசியலிலும் இப்படியான சங்கதிகள் நடப்பதுண்டு.

இலங்கையில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் 2019 மே மாதத்தில் முடிவுற்ற பின்னர் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் சீனாவின் பக்கம் சாய்வதாகவும், சீனாவுக்கு பல வசதிகளை இலங்கையில் செய்து கொடுப்பதாகவும் மேற்கு நாடுகளில் பெரும் பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்தப் பிரச்சாரத்தில் உலகின் பொலிஸ்காரனாக விளங்கும் அமெரிக்காவே முன்னணியில் நின்றது.

இன்னொரு பக்கம் மகிந்த அரசாங்கத்தின் போக்கு குறித்து இந்தியாவும் கவலை கொண்டிருந்தது. அதனால் அதுவும் மகிந்த அரசாங்கத்துக்கு எதிராக காய்களை மறைமுகமாக நகர்த்தி வந்தது.

புலிகளுக்கு எதிரான யுத்த காலத்தில் இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு பல்வேறு வடிவங்களில் உதவி வந்தது. ஏனெனில் மற்றைய நாடுகள் இலங்கைக்கு பண உதவியும் ஆயுத உதவியும் செய்தாலும், அயல்நாடு என்ற வகையில் அதைவிடக் கூடுதலான பல்வேறு உதவிகளை இந்தியாவே உதவக்கூடிய நாடாக இருந்தது.

***பிரதீபன்***

அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் புலிகளை பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்திருந்தாலும், இந்த நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களே புலிகளுக்கு பெருமளவு நிதி வழங்கி யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல ஊக்குவித்தனர் என்ற மற்றொரு பக்க உண்மையும் இருக்கின்றது.

அமெரிக்க அரசைப் பொறுத்தவரையிலும் அது பல நாடுகளில் செயல்பட்டது போல இலங்கை விவகாரத்திலும் ஒரு இரட்டை நிலையையே வகித்தது. அமெரிக்காவின் 2001 செப்ரெம்பர் 11 இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் பயங்கரவாதத்தை ஒழிப்பதையே அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு.புஸ் தனது அரசியல் – இராணுவ முன்னுரிமையாக வைத்திருந்தார்.

ஆனால், ஒபாமாவின் அமெரிக்க அரசாங்கம் இலங்கை யுத்தத்தின் கடைசித் தருண நேரத்தில் புலிகளுக்கு



எதிரான யுத்தத்தை நிறுத்துவதற்கு இலங்கை அரசின் மீது பலத்த நிர்ப்பந்தங்களைச் செலுத்தியதாக இப்பொழுது தகவல்கள் வெளிவந்துள்ளன. அந்த நேரத்தில் கொழும்பில் அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபேர்ட் ஓ பிளேக் (Robert O Blake) புலிகளுக்கு எதிரான போரை இலங்கை நிறுத்தாவிடில் எதிர்காலத்தில் போர்க்குற்ற விசாரணையை எதிர்நோக்க வேண்டி வரும் என எச்சரித்ததாக அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளராகப் பதவி வகித்த கலாநிதி மொகான் சமரநாயக்க சமீபத்தில் தெரிவித்திருந்தார். அவ்வாறே பின்னர் மகிந்த அரசின் மீது ஜெனிவாவில் போர்க்குற்ற தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.

சொல்லப்போனால், போர் முடிவுற்ற பின்னர் 2015 ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் மூலம் மகிந்தவின் ஆட்சி கவிழ்க்கப்படும்வரை, அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் மகிந்த அரசு மீது ஒரு விரோதப் போக்கையே கடைப்பிடித்து வந்தன எனலாம்.

ஆனால், 2015 ஜனாதிபதி தேர்தலின் பின் அமெரிக்கா பின்னணியில் இருந்து உருவாக்கிய ரணில் – மைத்திரி தலைமையிலான கூட்டரசாங்கத்தின் உடைவும், கடந்த வருடம் பெப்ருவரியில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் மகிந்த அணிக்கு சார்பான சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் அமோக வெற்றியும் அமெரிக்காவின் சிந்தனைகளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. அதன் வெளிப்பாடாக சில நடவடிக்கைகள் திரைமறைவில் நடைபெற்று வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

மகிந்த காலத்து போர்க்குற்றங்கள் எனப்படுபவை மகிந்த மீது மட்டுமின்றி, அவரது சகோதரரும் யுத்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தவருமான கோத்தபாய ராஜபக்ச மீதும் சுமத்தப்பட்டு வந்தது.

அதுமட்டுமின்றி, கடும் போக்கு பௌத்த சிங்கள பேரினவாதிகளின் ஊக்குவிப்பாளராகவும், முஸ்லீம் மக்களுக்கு எதிரான

போக்குடையவராகவும் கோத்தபாய சித்தரிக்கப்பட்டு வந்தார். ஆனால் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வந்தவர் கோத்தாதான் எனக் கருதிய சாதாரண கிராமப்புற சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் கோத்தா மீது அளவற்ற மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளனர்.

ரணில் – மைத்திரி அரசு கொண்டுவந்த 19 ஆவது அரசியல் திருத்தம் காரணமாக மகிந்த மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டது. அந்தத் அந்த திருத்தச்சட்டத்தில் கொண்டு வரப்பட்ட இன்னொரு சரத்து காரணமாக முப்பது வயதுக்குட்பட்ட மகிந்தவின் புதல்வர் நாமல் ராஜபக்சவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு தடை வித்திக்கப்பட்டது.

சில வேளைகளில் மகிந்த குடும்பத்தில் இருந்து கோத்தபாய ராஜபக்ச போட்டியிடலாம் எனக் கருதிய ரணில் அரசாங்கம் இரட்டைப் பிராஜாவுரிமை உடையவர்களும் (கோத்தாவுக்கு அமெரிக்க குடியுரிமையும் உண்டு) தேர்தலில் போட்டியிட முடியாது என்ற ஒரு சரத்தையும் 19 ஆவது திருத்தத்தில் சேர்த்திருந்தது.

ஆனால், கோத்தா இவையெல்லாவற்றையும் புறந்தள்ளி தான் எப்படியும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் எனக் கூறி வந்தார். அதற்காக தனது அமெரிக்க குடியுரிமையை ரத்துச்செய்யும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

கோத்தாவின் அந்த முயற்சி சாத்தியப்படாது என்றும், அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை அமெரக்கா விரும்பாதபடியால் அவரது அமெரிக்க குடியுரிமையை நீக்க அமெரிக்கா சம்மதிக்காது எனவும் அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. இலங்கையில் தற்போதைய தூதுவருக்கு முன்னதாக அமெரிகத் தூதுவராகப் பதவி வகித்த Atul Keshap என்பவரும் கோத்தபாய இலங்கை ஜனாதிபதியாக வருவதை அமெரிக்கா தடுக்கும் எனக் கூறியதாக ஒரு சர்ச்சையும் உருவாகி இருந்தது.

ஆனால், திரைமறைவில் அமெரிக்க அதிகாரிகளுக்கும் கோத்தபாய ராஜபக்சவுக்கும் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகவும், அதன் விளைவாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தடையாக இருக்கும் அவரது அமெரிக்க குடியுரிமையை நீக்குவதற்கு அமெரிக்கா பச்சைக்கொடி காட்டிவிட்டது என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில், சில நாட்களுக்கு முன்னர் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவர் Alaina B.Teplitz மகிந்த ராஜபக்ச, ஜீ.எல்.பீரிஸ் உட்பட எதிரணி முக்கியஸ்தர்கள் சிலரைக் கூப்பிட்டு கலந்துரையாடியுள்ளார். ஆனால், அந்தக் கலந்துரையாடலில் என்ன பேசப்பட்டது என்ற விடயம் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஆனாலும், முன்னைய மகிந்த அரசாங்கம் போல எதிர்கால ராஜபக்ச அரசாங்கம் ஒன்று சீனாவுடன் பொருளாதாரம் தவிர்ந்த இராணுவ மூலோபாய கூட்டு எதனையும் வைக்கக்கூடாது எனபதும், அதேநேரத்தில் இலங்கையில் அமெரிக்காவின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் கோத்தாவை இலங்கையின் எதிர்கால ஜனாதிபதியாக அங்கீகரிக்க அமெரிக்க தயாராகி வருவதான ஒரு ஊகம் அரசியல் வட்டாரங்களில் காணப்படுகிறது.

அமெரிக்காவின் இந்தப் புதிய போக்கிற்கு கட்டியம் கூறுவது போல அண்மையில் ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளது. அமெரிக்காவின் முக்கியமான இராஜதந்திரிகளில் ஒருவரும், இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவருமான ரொபேர்ட் ஓ பிளேக் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் பேசும்போது இலங்கையில் பயங்கரவாதத்துக்கு எதிரான போரின்போது அப்போது பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தபாய கையாண்ட வழிமுறையை வெகுவாகச் சிலாகித்துப் பேசியிருக்கிறார்.

“சீனா மற்றும் தென்னாசியா மீதான அமெரிக்க வெளியுறவுக் கொள்கை மற்றும் இலங்கை மீதான இதன் அர்த்தம்” என்ற தலைப்பில் கொழும்பில் உரையாற்றிய பிளேக், கோத்தபாய இலங்கையின் யுத்தகாலத்தில் புலனாய்வுப் பிரிவுகளை ஒழுங்கான முறையில் ஒருங்கிணைத்து, உயர்மட்ட தொழில்நுட்பத் திறமையாளர்களின் உதவியையும் பெற்றபடியாலேயே போரில் வெற்றிபெற முடிந்தது என கோத்தாவுக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

முன்னர் அமெரிக்க அதிகாரிகளால் தொடர்ச்சியாக போர்க்குற்றம் சுமத்தப்பட்டு வந்த கோத்தாவை ஒரு உயர்மட்ட அமெரிக்க அதிகாரி முன்னுதாரணம் காட்டுவதென்பது, அமெரிக்காவின் இலங்கை பற்றிய நிலைப்பாட்டில் ‘யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே’ என்பதன் அறிகுறியாகவே விடயமறிந்தவர்கள் இதைப் பார்க்கின்றனர்.

ஆம், அமெரிக்கா இலங்கையில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தில் குதிரையை மாற்றத் தீர்மானித்துவிட்டது போலத்தான் தோன்றுகிறது.

பாரம்பரியமாக ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து வந்த அமெரிக்கா, திடீரென தனது நிலைப்பாடடை மாற்றி அக்கட்சிக்கு எதிரான ஒரு வேட்பாளரை ஆதரிக்குமா என சிலருக்கு ஐயம் எழலாம்.

‘அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியும் இல்லை’ என்பதை இதற்குப் பதிலாகச் சொல்லலாம்.

இன்றைய பூகோளமயப்பட்ட அரசியலில் ஒவ்வொரு நாடும் தத்தமது நலன்களை முதன்மைப்படுத்தும் போக்கே நிலவுகின்றது. இதற்கு அமெரிக்க வரலாற்றிலேயே பல உதாரணங்கள் உண்டு. அமெரிக்கா மட்டுமின்றி, ரஸ்யா, சீனா, இந்தியா உட்பட பெரும் நாடுகள் எல்லாம் அதன் அடிப்படையிலேயே செயல்படுகின்றன.

உதாரணமாக, 1947 இல் பாகிஸ்தான் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து அந்த நாட்டுடன் கூடிக்குலாவி கொஞ்சி வந்த அமெரிக்கா, அந்த நாட்டுடனான உறவுகளைக் குறைத்துக்கொண்டு, பாகிஸ்தானின் பரமவைரி நாடான இந்தியாவுடன் இப்பொழுது ஒட்டி உறவாடி வருவது இதற்கு ஒரு உதாரணம்.

அதேநேரத்தில், ஒரே நேரத்தில் சீனாவுடனும் அமெரிக்காவுடனும் நெருங்கி உறவாடி வந்த பாகிஸ்தானின் இராஜதந்திரம் போல, இலங்கையின் எதிர்கால புதிய அரசாங்கத்தின் போக்கும் சமகாலத்தில் சீனாவுடனும் அமெரிக்காவுடனும் அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**நன்றி, இணையத்தளம்:** chakkaram.com

---

விடுதலையை விட அரிதானது எதுவும் இல்லை. சுதந்திரமின்றி அடிமைகளாக வாழ்வதை விட, கஷ்டங்களை, தியாகங்களை எதிர்கொள்வது எவ்வளவோ மேல். வியட்நாம் ஒரே நாடு. வியட்நாமியர்கள் ஒரே தேசத்தவர்கள். தெற்கின் இரத்தம், வியட்நாமிய இரத்தம், வியட்நாமிய சதை. எனக்கு ஒரே ஒரு ஆசை தான் உள்ளது. உண்மையான ஆசை. நமது நாடு முழு விடுதலையடைய வேண்டும். நம் மக்கள் முழு விடுதலை பெற்று, போதிய அளவு உணவு, உடை, கல்வி பெற வேண்டும்.

**–ஹோ சி மின்**

# பயங்கரவாதம் ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகளுக்கான உதாரணம்

வரலாற்றில் நாம் படித்த ஒரு முக்கியமான தகவல் உண்டு.

ரஸ்யாவில் கொடுங்கோல் ஆட்சி நடத்திய ஜார் மன்னனை மக்கள் புரட்சியின் மூலம் தூக்கி எறிந்து அந்த மிகப்பெரிய மண்ணில் சோசலிச சமதர்ம சமுதாயம் ஒன்றை உலக வரலாற்றில் முதல் தடவையாக நிறுவிய பெருமை லெனின் அவர்களுக்கு உண்டு.

லெனின் மக்களை அணிதிரட்டி புரட்சி நடத்துவதற்கு முன்பதாக அவரது உடன் பிறந்த அண்ணன் ஒருவர் தனிப்பட்ட முறையில் ஜார் மன்னனைக் கொலை செய்ய முயன்று அது தோல்வியில் முடிய அவருக்கு ஜார் மன்னன் மரணதண்டனை விதித்த வரலாறு நாம் படித்த சரித்திரம்.

அவருடைய 'தனிமனித பயங்கரவாத' செயலால் முன்னரிலிலும் பார்க்க அதிக அடக்குமுறையை ஜார் மன்னன் மக்கள் மீது ஏவிவிட்டான்.

லெனினுடைய அண்ணனின் தீரச்செயலை தனிமனித செயல் என வர்ணித்த லெனின் 'ஒரு மன்னனைக் கொலை செய்தால் அந்த இடத்துக்கு இன்னொரு மன்னன் வந்து அடக்குமுறையை மேற்கொள்வான். எனவே முழு மன்னர் பரம்பரையையும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படுகின்ற சுரண்டும் வர்க்கத்தையும் முற்றுமுழுதாக அழித்தொழித்து அவர்களது அடக்குமுறை அரசு இயந்திரம் உள்ள இடத்தில் தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகார அரசு இயந்திரம் ஒன்றை நிறுவும் போதே மக்களுக்கு உண்மையான விடுதலை கிடைக்கும்' என மக்களுக்குப் போதித்தார்.

பின்னர், அதன்படியே மக்களைத் திரட்டி ஆயுதப் புரட்சியின் மூலம் ஜார் அரச வம்சத்தை முற்றுமுழுதாகத் துடைத்தொழித்து ரஸ்ய மண்ணில் சமதர்மப் பூங்காவை உருவாக்கி வழிகாட்டினார்.

லெனினுடைய அண்ணனின் தனிமனித பயங்கரவாத செயலால் ரஸ்யாவில் எதிர்விளைவுள்தான் ஏற்பட்டன. அதேபோல, ஏப்ரல் 21ஆம் திகதி ஐ.எஸ். இஸ்லாமிய பயங்கரவாதிகளால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குழுப் பயங்கரவாதம் இலங்கையின் ஏனைய இன மக்களுக்கு மட்டுமின்றி, இலங்கையில் வாழும் முஸ்லீம்



மக்களுக்கும் எதிர்மறையான, பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய செயல்பாடுகளால் இலங்கை மக்களின் முழு இயல்பு வாழ்க்கையும் சீர்குலைந்துள்ளது. பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. அரசியல் கட்சிகளிடையே பரஸ்பர சந்தேகங்களும் குற்றச்சாட்டுகளும் உருவாகியுள்ளன. சுற்றுலாப்பயணிகள் மட்டுமின்றி, வெளிநாட்டு அரசியல் தலைவர்களும் இலங்கைக்கு வர அஞ்சுகிறார்கள் என்பதற்கு இலங்கை வரவிருந்த பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் தனது பயணத்தை இரத்துச் செய்தது ஒரு உதாரணம்.

**சுப்பராயன்**

அதேநேரத்தில், இந்த பயங்கரவாதச் செயற்பாடு இலங்கையில் 1000 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்கின்ற முஸ்லீம் மக்களையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

முஸ்லீம் மக்கள் வாழும் இடங்களில் அவர்கள் பிற சமூக மக்களால் சந்தேகக்கண் கொண்டு பார்க்கப்படுகிறார்கள். வர்த்தகத்தில் கொடிகட்டிப்பறந்த முஸ்லீம் வர்த்தகர்கள் சுதந்திரமாக வர்த்தகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முஸ்லீம் பெண்கள் தமது பாரம்பரிய கலாச்சார உடைகளை அணிய முடியவில்லை. பள்ளிவாயல்களில் மனநிம்மதியுடன் தொழுகை நடத்த முடியவில்லை. இந்த நிலைமை முஸ்லீம் மக்கள் மத்தியில் உருவான ஒரு சிறிய குழு மேற்கொண்ட பயங்கரவாதச் செயல்பாட்டால் முழு முஸ்லீம் சமூகத்துக்கும் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் பின், மட்டக்களப்பில் முஸ்லீம் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்த இலங்கை இராணுவத்திலுள்ள உயரதிகாரிகள் குழுவில் இடம் பெற்றிருந்த பிரிகேடியர் தர அதிகாரியொருவர் இந்தத் தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், எப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையில் முஸ்லீம்களுக்கு சுமூகமாகவும் அமைதியாகவும் இருந்த வாழ்க்கை நிலைமை அதன்பின்னர் தலைகீழாக மாறியுள்ளது எனக் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

இது ஒருபுறமிருக்க, நாட்டுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது மட்டுமின்றி, அவர்களது உரிமைப் போராட்டங்களையும் முன்னெடுக்க முடியாத சூழல் இந்தப் பயங்கரவதத் தாக்குதலால் தோன்றியுள்ளது.

உதாரணமாக, உலகத் தொழிலாளி வர்க்கத்தின் போர்ப்பிரகடன தினமான மேதினத்தையும் இம்முறை நினைவுகூர முடியாத நிலை இலங்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. பொதுவாக மேதினத்தில் அரசியல் கட்சிகள் தமது பலத்தைக் காட்டுவதற்கு முயற்சிப்பதுண்டு. அதுவும் இந்த ஆண்டு முடிவில் பல தேர்தல்கள் இலங்கையில் நடைபெறவுள்ள சூழலில் அரசியல்

கட்சிகள், குறிப்பாக எதிர்க்கட்சிகள் தனம பலத்தைக் காட்டுவதற்குத் திட்டமிட்டிருந்தன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான பிரதான எதிர்க்கட்சி இம்முறை திரிகோணமலையில் இருந்து கொழும்பு வரை பிரமாண்டமான மோட்டார் பேரணி ஒன்றை நடத்தி நாட்டு மக்கள் மத்தியில் தாக்கத்தையும், ஐ.தே.க. அரசாங்கத்துக்கு அதிர்ச்சி வைத்தியத்தையும் கொடுக்கத் திட்டமிட்டிருந்தது. ஆனால் ஈஸ்டர் தின பயங்கரவாதத் தாக்குதலால் அது இயலாமல் போய்விட்டது. இது அரசாங்கத்தைப் பொறுத்தவரை நிம்மதிப் பெருமூச்சு விடும் சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் கூட, இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

மீண்டும் தமிழ்ப் பகுதிகளில் பல சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு வீதிச்சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. யாழ்.பல்கலைக்கழகம் சோதனையிடப்பட்டு, அங்கு புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தை தமது மாணவர் பேரவைக் காரியாலயத்தில் வைத்திருந்ததிற்காக மாணவர் அவைத் தலைவரும், செயலாளரும், அங்குள்ள உணவு விடுதி ஊழியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தி பல்கலைக்கழக துணைவேந்தர் விக்னேஸ்வரனும் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதுதவிர, ஓராண்டுக்கும் மேலாக நடத்தப்பட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம், இராணுவம் வசமுள்ள காணிகளை விடுவிக்கும் போராட்டம் போன்ற போராட்டங்களும் பின்னடைவுக்குள்ளாகி கவனிப்பாரற்றுப் போயுள்ளன.

மொத்தத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் இலங்கை அனைத்துத் தரப்பு மக்களினதும் வாழ்வில் எதிர்மறையான நிலையையே உண்டுபண்ணியுள்ளது. முஸ்லீம் மக்கள் உட்பட நாட்டு மக்கள் யாருமே இந்த நிலையையிட்டு மகிழ்ச்சியடையவில்லை.

ஆனால், ஒருபக்கத்தில் இந்தத் தாக்குதலால் மகிழ்ச்சி அடைபவர்கள் நாளுக்குநாள் மக்களின் எதிர்ப்பால் திக்குமுக்காடிப்போயிருந்த ஆட்சியாளர்கள்.

இன்னொரு பக்கத்தில் மகிழ்ச்சியடைபவர்கள் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கக் காத்திருந்த உலக மேலாதிக்க சக்திகள்.

எனவே, இந்தப் பயங்கரவாதக் குண்டுத்தாக்குதலில் தொடர்பு இருக்கிறதோ இல்லையோ, இதனால் இலாபமடைபவர்கள் உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த இரண்டு மக்கள் விரோத சக்திகளின் திட்டங்களை தவிடுபொடியாக்குவதே இலங்கையின் அனைத்து இன மக்களினதும் இன்றைய தலையாய கடமையாகும்.

# கவிதை பற்றி தோழர் மு.கார்த்திகேசன்

“சமூகத்தின் தேவைகளை எடுத்தியம்ப முதன்முதல் எழுந்தது கவிதையே. இருள் சூழ்ந்த பண்டைக்காலத்தில் மனிதன் இயற்கைக்கு எதிராக தனித்து வாழ இயலாதவனாகவும் கூட்டு முயற்சியே அவன் வாழ்விற்கு இன்றியமையாததாகவும் இருந்தபோது, மொழி அச்சமூகத்தைக் கவிதை மூலமாகவே தொழில் புரியச் செய்தது. எழுத்தையோ நூலையோ அறியா அக்காலத்தில் கவிதையே தன் ஒழுங்கான தன்மையினாலும் ஓசையினாலும் மனிதனது மனதையும் கற்பனையையும் அருட்டி மனித சமூகத்தை இயற்கைக்கு எதிராகப் போராடத் தூண்டியது.

உழைப்பின் மூலம் ஏற்பட்ட ஒற்றுமையினாலேயே கவிதை தோன்றியது. ஆனால், இன்றோ சமுதாயத்திற்கும் கவிதைக்குமோ, அன்றி உழைப்பிற்கும் கவிதைக்குமோ யாதொரு தொடர்புமின்றி இரண்டும் இரு வேறுபட்ட நிலையில் உள்ளனவாகக் கருதப்படுகிறது. இப்பொழுது அது தனியொருவரின் தனிப்பட்ட கற்பனையினால் உருவாக்கப்படுவதாகவே கருதப்படுகிறது. எல்லாக் காலங்களிலும் எல்லா மொழிகளிலும் கவிதை எழுதப்பட்டுள்ளது. எந்தக் காலத்திலும் சமூகத்திலிருந்து அப்பாற்பட்ட உயர்நிலையில்லாமல் தம் கரங்களினால் படைக்கும் ஆற்றல் வாய்ந்த, கூட்டு முயற்சியுடைய மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் முறையில் எழுதப்பட்ட கவிதையே உயர்ந்ததாகவும் மறத்தற்கரியதாகவும் கொள்ளப்படுகிறது. மக்கள் வாழ்விற்கு உழைப்பே நியதி. எனவே, எக்காலத்திலும் எந்நாட்டிலும் உழைப்பாளர்களே காட்சிக்கெளிய பல்லாயிரக்கணக்கான கரங்களையுடைய இவ்வுலகப் பிரம்மாக்கள்”

இவ்வாறு, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் புரட்சிக் கவிஞன், பருத்தித்துறை – வராத்துப்பளை வாழ் பசுபதி (யாழ்ப்பாணக் கவிராயர்) அவர்கள் நினைவாக ‘வசந்தம்’ முற்போக்கு கலை இலக்கிய இதழ் வெளியிட்ட பசுபதி நினைவு மலரில் அவர் பற்றி எழுதிய குறிப்புரையில் குறிப்பிட்டுள்ளார் தோழர் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்.

தேசிய விடுதலைப் புரட்சி வெற்றி அடையவேண்டும் என்றால் அது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பாதையில் செல்ல வேண்டும். தேசிய விடுதலை வர்க்க விடுதலையுடன் இணைந்து செல்ல வேண்டும். தேசிய சுதந்திரத்தை சோசலிசத்திலிருந்து பிரிக்க முடியாது. தொழிலாளி வர்க்கத்தை விடுதலை செய்தால் மட்டுமே நாம் தேசிய இனத்தை விடுதலை செய்ய முடியும். இரண்டு விடுதலைகளும் கம்யூனிசத்துக்கும் உலகப் புரட்சிக்கும் அடிப்படையாகும்.

—ஹோ சி மின்

---

நமது மலைகள் எப்பொழுதும் இருக்கும்
நமது ஆறுகள் எப்பொழுதும் இருக்கும்
நமது மக்கள் எப்பொழுதும் இருப்பார்கள்
அமெரிக்க படையெடுப்பாளர்கள் தோற்பார்கள்,
நாம் நமது பூமியை மேலும்
பத்து மடங்கு அழகாக நிர்மாணிப்போம்

—ஹோ சி மின்

**(வியட்நாம் கம்யூனிஸ்ட் தலைவரும் அந்நாட்டு விடுதலைக்குப் போராடி ஜப்பான், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்று ஏகாதிபத்திய நாடுகளின் இராணுவங்களை முறியடித்து சுதந்திர வியட்நாம் நாட்டை உருவாக்க காரணமாக இருந்த தோழர் ஹோ சி மின் பிறந்தநாள் மே 20 ஆகும்.)**

# அரசும் மேலைத்தேயமும் இயக்கும் பொம்மைகளாக நம் இளைஞர்களை இழுத்துச் சென்ற காரணிகளைத் தேட ஏன் தயங்குகிறோம்?



2002 இல் என்று நினைவு. எங்களது ஊரில் திடீரென உருவெடுத்த ஒரு பெயர் தெரியாத அமைப்பு தொலைகாட்சி பார்ப்பது "ஹராம்" என்று பிரச்சாரம் செய்யத்தொடங்கியது. இந்தச் செயல்பாடு பிரச்சாரத்தோடு நின்றுவிடவில்லை. வீடு வீடாகச் சென்று அன்டனாக்களை உடைப்பது, சீடி விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களை எச்சரிக்கை செய்து, கடைகளை எரிப்பது என்று வன்முறையாக மாறியது.

கறுப்பு அபாயாக்களையும், நீண்ட அங்கிகளையும் கொண்டுவந்து இதுதான் இஸ்லாமிய உடை என்று யாரோ சில வியாபாரிகள் அறிமுகம் செய்தார்கள். எங்கள் இறுதித் தூதர் முஹம்மத் நபி அவர்கள் வாழ்ந்த மண்ணில் பெண்கள் எல்லாம் இதைத்தான் அணிகின்றார்கள். இது எங்கள் கலாசாரம் என்று ஏற்பதற்கு பெண்களையும் பிள்ளைகளையும் பழக்கப்படுத்தினார்கள். இது பெண்களுக்குப் பாதுகாப்பான கௌரவமான உடை என்பதான உணர்வை வலிந்து உருவாக்கிப் பெண்கள் வாயாலேயே சொல்லும்படி மூளைச்சலவை நடந்தது. பாடசாலை மாணவிகளும், பல்கலைக்கழகம் செல்லும் மாணவிகளும் கறுப்பு அங்கியை மட்டுந்தான் கட்டாயமாக அணியவேண்டும் என்று வெள்ளிக்கிழமை ஜும்மாக்களில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்துப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இது எங்கள் ஊரில் மட்டும் நிகழ்ந்த சம்பவமில்லை. பெரும்பாலாக முஸ்லிம்கள் வாழும் எல்லா ஊரிலும் இப்படித்தான் நடந்தது.

திடீரென்று முளைத்த சிந்தனைப் பள்ளிகளுக்கு அரபு நாடுகளிலிருந்து நிதி வசூலாகி வந்தது. வெறும் நூறு இருநூறோ ரூபாய்களை மட்டும் நன்கொடையாக செலுத்தி நாங்கள் கற்ற குர்ஆனை மாதாந்தம் மூவாயிரம் செலுத்திக் கற்கும் நிலை உருவாக்கப்பட்டது. மத கல்வி அவசியமேயின்றி முன்னிறுத்தப்பட்டது. வியாபாரமானது. கிலாபத் பற்றிய எண்ணங்கள் இளைஞர்களிடையே விதைக்கப்பட்டு இந்த பூமி முஸ்லிம்களால் ஆழப்படவேண்டியது என்ற பிரம்மை திணிக்கப்பட்டது. சில உலமாக்கள் சொத்துக்கள் சேர்த்தார்கள். எங்களுக்குத் தெரிய பாங்கு முழங்கிக் கொண்டிருந்த சம்பளமே இல்லாத மௌலவிகள் வெளிநாடுகளுக்குப் போய் வந்தார்கள். அவர்கள் வீடுகளுக்குப் பாக்கிஸ்தானிலிருந்தும் மத்திய கிழக்கிலிருந்தும் நண்பர்கள் வந்து தங்கிச் சென்றார்கள். அவ்வப்போது ஆடு மாடு அறுத்து விருந்துகள் நடத்தினார்கள். கஞ்சாவை அம்மியில் அரைத்து இறைச்சிக் கறி சமைத்த வாசம் எங்கள் மூக்குத் துவாரங்களை அரித்துக் கொண்டு காற்றிலேறிப் போனது.

இவர்களுக்குள் இந்த சிந்தனை மாற்றங்கள் எப்படித் திடீரெனத் தோன்றின என்று சிந்திப்பதில் யாருக்கும் ஆர்வம் இருக்கவில்லை.

சிங்கள மக்கள் சீத்தையையா அணிகின்றார்கள்? அவர்களது கலாசாரத்தில் மாற்றம் உண்டாகவில்லையா, நாங்கள் அபாயா அணிந்தால் தீவிரவாதமா என்று அபாயா திணிக்கப்பட்ட அரசியலுக்கு முட்டுக் கொடுப்பதை வெட்கமேயின்றி நிகழ்த்தி வெற்றி கண்டவர்கள் முகங்கள் எல்லாம் வரிசையாக கண்களில் வந்து போகின்றன.

மதத்தின் பெயராலான இத்தகைய சின்னச்சின்ன எக்ஸ்ட்ரீம் செயல்பாடுகளின் ஊற்றுக்கண்களை ஆழமாக நோக்கத் தவறியதோடு, அமெரிக்கா 9/11 தாக்குதலுக்குப் பின்னர் இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாகப் பார்க்கும் சூழ்நிலையை, இஸ்லாமோபோபியா போன்ற அரசியல்களைப் பேசுவதை மனிதாபிமானச் செயற்பாடாக கருதியவர்கள் எல்லாம்கூட இன்றைய இலங்கை முஸ்லிம்களின் அரசியல் நிலைக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களே.

**ஸர்மிளா செயித்**

இஸ்லாமிய தீவிரவாதம் குறித்து பேசுகின்ற எழுதுகின்றவர்களை மேலைத்தேய கைக்கூலிகள் என்றவர்கள், உண்மையையை உரக்கப் பேசிய எழுதியவர்களின் கழுத்துகள் நெறிக்கப்பட்டும், சமூக ஊடகங்களிலும், வாழ்விலும் அவமானப்படுத்தப்பட்ட போதும் மௌனித்திருந்தவர்கள்கூட இதன் பின்னால் இருக்கிறார்கள்.

இப்போது வெள்ளம் தலைக்கு மேல்! நாடகங்களின் அரங்குகளை மாற்ற வேண்டிய தருணம்.

இலங்கை முஸ்லிம்களின் எதிர்வினைகளை மூன்று வகையாகப் பார்க்க முடிகின்றது.

1) தப்பிக்கும் தந்திரம்
2) குற்றஞ்சுமத்துதல்
3) எதிர்காலம் குறித்த அச்சம்

இலங்கை முஸ்லிம்கள் அனைவரும் தீவிரவாதத்திற்கு எதிராக அழத் தொடங்கியிருக்கி(றோம்)றார்கள். இது தப்பித்தல், அச்சம் சார்ந்தது.

குண்டு வைத்தவர்கள் தீவிரவாதிகள், கொல்லப்படவேண்டியவர்கள், அவர்கள் முஸ்லிம்கள் அல்ல, இஸ்லாம் தீவிரவாத மார்க்கமல்ல என்பதெல்லாம் தப்பித்தல் மற்றும் குற்றச் சுமத்தல் உளவியல் சார்ந்தவை.

தீவிரவாதிகளுக்கு மதமில்லை. அவர்கள்

யாராக இருந்தாலும் கொல்லப்பட வேண்டும் என்று தப்பிக்க முற்படும் பச்சோந்திகளாக முஸ்லிம்கள் மாறவேண்டியது காலத்தின் தேவையாகியிருக்கிறது.

தீவிரவாதக் கருத்துக்களுக்கு எதிராக கடந்த காலங்களில் எதிர்வினையாற்றி இருக்கிறோமா என்று நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைக் கேளுங்கள். மௌனமாக இருந்தவர்கள்கூட தீவிரவாதத்தை ஆதரித்தவர்கள் என்பேன். சமூக ஊடகங்களில் வெளியான மத தீவிரவாத கருத்துக்களை நமக்கென்ன என்றும், யாரோ ஒருவன் உளருகிறான் என்றும் பொறுப்பற்று இருந்த நீங்கள் இப்போது நல்லிணக்கம் பேசுகிறீர்கள். தீவிரவாதிகளைக் கொல்லவேண்டும் என்கிறீர்கள்.

முளையிலேயே கிள்ளி எறியவேண்டியதை, அதற்கான வாய்ப்புகள் இருந்தும் நீங்கள் செய்ய முன்வரவில்லை. கழுத்திற்கு கத்தி வந்துவிட்ட பிற்பாடே தீவிரவாதம் ஒழிக்கப்படவேண்டும் வன்முறைகளுக்கு மார்க்கத்தில் இடமில்லை என்று கத்துகிறீர்கள். தேவைக்கு அதிகமாக சிந்தனைப் பள்ளிகள் வந்தபோது, அபாயா, முகமூடிகள் வந்தபோது அதனைக் கலாசார மாற்றம் என்பதாக அங்கீகரித்தவர்கள், அவற்றை எல்லாம் நம் கைகளில் கொணர்ந்து சேர்த்த அதே மனிதர்களால் தீனுக்கான போர் நடத்தப்படும்போது தனித்து நிற்கப் பார்ப்பது அறிவு முரணில்லையா? வழக்கம்போல அரசாங்கத்தின் சதி, மேலைத்தேய சதி என்றெல்லாம் புலனாய்வு விசாரணைகளை நமக்கு நாமே செய்து திருப்திப்பட்டுக் கொள்ள விளைவதால் எவ்வளவு தூரம் நம்மை நாம் நியாயப்படுத்திக் கொள்ளமுடியும்? அரசும் மேலைத்தேயமும் இயக்கும் பொம்மைகளாக நம் இளைஞர்களை இழுத்துச் சென்ற காரணிகளைத் தேட ஏன் தயங்குகிறோம்?

இந்தப் பதிவு உங்களில் பலருக்கு உவப்பாக இராதென்று தெரியும். எப்போதும்போல காட்டிக் கொடுப்பவள், கைக்கூலி என்று உங்கள் இயலாமைகளைக் கோபங்களாக கொட்டிவிட்டுக் கடந்துபோவீர்கள் என்பதை அறிந்தே இருக்கிறேன்.

இந்த உண்மைகள் கசப்பானவைதான் மருந்துகள் போல. நோய் தீரவிரும்பினால் நீங்கள் ஒவ்வொருவரும் சிகிச்சையளிப்பட்டே ஆகவேண்டும். உங்கள் நோயைக் கண்டறிந்து குணப்படுத்துங்கள். நோய்க்கூறுகளுக்கு சிகிச்சையளிப்பதும், சுகதேகிபோல நடித்திருப்பதும் உங்கள் தெரிவு.

# தமிழீழ போராட்டத்துடன் தொடர்புடைய விடுதலை இயக்கங்கள் / அரசியல் கட்சிகள்

1. தமிழ் மாணவர் பேரவை
2. தமிழ் இளைஞர் பேரவை
3. தமிழ் புதிய புலிகள் (TNT: 1972-1978)
4. தமிழர் விடுதலை இயக்கம் (TLO: 1974-1978)
5. இந்திய இலங்கை இணைப்பு இயக்கம் (ICMM: 1971-1980)
6. தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி (1977 - 1983) (ரி.பி.டி.எப்)
7. தமிழர் விடுதலைக் கூட்டனி (ரி.யு.எல்.எப்) அரசியல் கட்சி
8. தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ)
9. தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ)
10. ஈழ புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்)
11. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி (ஈபிஆர்எல்எ.ஃப் - சுரேஷ் அணி)
12. பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி (பத்மநாபா ஈபிஆர்எல்எ.ஃப்)
13. தமிழர் சமூக ஜனநாயக கட்சி (ஸ்.டி.பி.ரி) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது
14. ஈழ தேசிய விடுதலை முன்னணி ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், எல்.ரி.ரி.ஈ (ஈ.என்.எல்.எப்)
15. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்)
16. தமிழீழ விடுதலை இராணுவம் (ரெலா)
17. தமிழீழ இராணுவம் (ரி.ஈ.ஏ)
18. புரட்சிகர ஈழ விடுதலை இயக்கம் (றெலோ)
19. தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (என்.எல்.எப்.ரி)
20. தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி (பி.எல்.எப்.ரி)
21. தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை (ரி.பி.ஸ்.ஓ / ரி.எம்.பி.பி)
22. தமிழீழ விடுதலை தீவிரவாதிகள் (ரெலி)
23. தமிழீழ புரட்சி அமைப்பு (ரி.ஈ.ஆர்.ஓ)
24. தமிழீழ விடுதலை கெரில்லாக்கள் (TELG)
25. தமிழீழ செம்படை (ஆர்.எவ்.ரி.ஈ)
26. தமிழீழ தேசிய இராணுவம் (ரெனா)
27. ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டி.எல்.எவ்)
28. ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி)
29. தீப்பொறி
30. தமிழீழ பாதுகாப்பு படை (ரி.ஈ.டி.எவ்)
31. ஈழ விடுதலை புலிகள் (ஈ.எல்.ரி)
32. தமிழீழ மக்கள் கட்சி (TEMP)
33. தமிழீழ கொரில்லா இராணுவம் (GATE)
34. தமிழீழ புதிய சனநாயகக் கட்சி (என்.டி.பி.ரி)
35. தமிழீழ கழுகு முன்னணி (ரி.ஈ.ஈ.எவ்)
36. இலங்கை விடுதலை தமிழ் இராணுவம் (IFTA)
37. ஈழ புரட்சி கம்யூனிஸ்ட் கட்சி (ERCP)
38. தமிழீழ புரட்சிகர மக்கள் விடுதலை இராணுவம் (ரி.ஈ.ஆர்.பி.எல்.ஏ)
39. கழுகு படை (EM)
40. தமிழர் பாதுகாப்பு பேரவை
41. தமிழீழ விடுதலை நாக படை / கோப்ராக்கள் (TELC)
42. தமிழீழ கொமாண்டோக்கள் (TEC)
43. ஈழ விடுதலை பாதுகாப்பு முன்னணி (ஈ.எல்.டி.எவ்)
44. தமிழ் மக்கள் பாதுகாப்பு முன்னணி (ரி.பி.எஸ்.எவ்)
45. மக்கள் விடுதலை கட்சி (பி.எல்.பி)
46. சமூக புரட்சி சமூக விடுதலை (எஸ்.ஆர்.எஸ்.எல்)

47) தமிழீழ விடுதலைக் கரடிகள் இயக்கம்

48) தமிழீழ விடுதலை ஒன்றியம்

49) செங் கொரில்லாக்கள்

**மூலம்: முகநூல், சசிதரன்**

(குறிப்பு: இந்தப் பட்டியல் முழுமையானதல்ல)

# இந்தியாவில் 'மாமா ஹோ' என அன்புடன் அழைக்கப்பட்ட வியட்நாமின் தந்தை




வியட்நாமில் நீங்கள் எங்கு பயணம் மேற்கொண்டாலும், எல்லா இடங்களிலும் வியட்நாமின் தந்தை ஹோ சி மின்னின் முகத்தை பார்க்காமல் நீங்கள் தப்பவே முடியாது.

அவர் எங்கும் நிறைந்து இருக்கிறார். போக்குவரத்து சந்திப்புகளிலுள்ள பதாகைகள், சுவரொட்டிகள் என எங்கும் தெரிகிறார். பூங்காக்களில் உறுதியான, உயரமாக சிலை வடிவில் அவர்தான் நிற்கிறார். அருங்காட்சியகங்கள் மற்றும் அரசு கட்டிடங்களில் அவர் வாழ்கிறார். இந்தியாவில் மகாத்மா காந்தி எப்படியோ அவ்வாறுதான் வியட்நாமில் ஹோ சி மின்.

நாட்டிற்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்காக 1969ம் ஆண்டு அவருடைய இறப்புக்கு பின்னர், பெரியதொரு நகரான சைகோனுக்கு (Saigon) இவருடைய பெயர் சூட்டப்பட்டது. இப்போதும் இந்த நகரம் ஹோ சி மின் என்று அழைக்கப்படுகிறது. சைகோன் நகரின் மையத்தில் நாட்டிலேயே மிகவும் உயரமான ஹோ சி மின்னின் சிலை உள்ளது. இந்த சிலையில் வலது கையை உயர்த்தி கொண்டு இருக்கும் தங்களின் தலைவரைபோல, தங்களின் கையை உயர்த்தி இளைஞர்களும், இளம் பெண்களும் சுயப்படம் (செல்பி) எடுத்து கொள்கின்றனர்.

தலைநகர் ஹனோயிலுள்ள பரந்த சதுக்கத்தில் அவருடைய கல்லறை உள்ளது. தங்களுடைய நேசத்திற்குரிய தலைவருக்கு மரியாதை செலுத்த ஆயிரக்கணக்கான வியட்நாம் மக்கள் நாள்தோறும் இங்கு குவிகின்றனர். புகைப்படக்கருவிகள் அனுமதிக்கப்படாத இந்த கல்லறைக்கு உள்ளே ஹோ சி மின்னின் உடல் பதப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய தலைவரை புகழ்ந்து பேசுவதை சராசரி வியட்நாமியர் ஒருவரால் நிறுத்திவிட முடியாது. வெள்ளை நிற ஆடை அணிந்திருந்த சிறுமி ஒருவர், 'நாங்கள் ஹோ சி மின்னை மிகவும் நேசிக்கிறோம்' என்று தெரிவித்தார். ஸ்கூட்டரின் இருக்கையில் உட்கார்ந்திருந்த ஒரு தொழிலாளி, 'அவர் எங்களுக்கு சுதந்திரத்தை பெற்றுதந்தார். இன்று நாங்கள் சுதந்திரமாக, ஓரளவு செழிபுற்றிருக்கிறோம் என்றால் அவர் வாங்கி தந்த சுதந்திரத்தால்தான்' என்று தனது தலைவரை வெகுவாக பாராட்டினார். சைகோன் சதுக்கத்தில் சுயப்படம் (செல்பி) எடுப்பதில் மிகவும் கவனம் கொண்டிருந்த இளம் பெண்கள் சிலரும் தங்களுடைய தலைவரை பற்றி புகழ்ந்து பேசினர்.

நவீன வியட்நாமின் தந்தையாக இருப்பதற்கு அப்பாற்பட்டு, ஹோ சி மின் அந்நாட்டின் முதல் அதிபராகவும் இருந்துள்ளார். போர்களத்தில் வீரதீர படையினராகவும், கவரக்கூடிய தலைவராகவும் அவர் விளங்கினார் என்பதில் சந்தேகமே இல்லை. 3 பெரிய படைப்பிரிவுகளான பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்காவுக்கு எதிராக நடத்திய போரில் வியட்நாமின் கம்யூனிஸ்ட் படையை அவர் வழிநடத்தினார்.

எல்லா போரிலும் வியட்நாம் வென்றது. எல்லா சிக்கல்களுக்கும் எதிராக அவர் பெற்ற வெற்றிகளுக்காக தேசிய சின்னமாக விளங்குகிறார். 20 ஆண்டுகளாக நடைபெற்ற ரத்தக்கறை படிந்த போருக்கு பின்னர், வியட்நாமை தவிர வேறு எந்த நாடும் வல்லரசான அமெரிக்காவை போரில் தோற்கடித்தது கிடையாது. வியட்நாம் மக்கள் இது பற்றி பெருடையடைகின்றனர்.

ஹோ சி மின் போர்க்களத்தில் ஆக்ரோஷமானவர் ஆனால் வெளியில் சாந்தமானவர்.

அவர் சாதாரண வாழ்க்கையை வாழ்ந்தார். 1945–ல் அதிபரான பிறகு அவர் சிறிய வீடு ஒன்றில் வசிக்க முடிவெடுத்தார். ஒரு அதிகாரபூர்வ சுற்றுலா வழிகாட்டி அந்த வீட்டைச் சுட்டிக்காட்டி "நமது தலைவர்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

ஆளும் கட்சியுடன் இருக்கும் முஸ்லீம் அரசியல்வாதிகளுக்கு தொடர்பு இருந்தது தெரிய வருகிறது. இருந்தும் அரசு இதுவரை அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அசமந்தமாக இருப்பதிலிருந்து, இந்தத் தாக்குதலால் அரசாங்கமும் நன்மை அடைந்திருப்பது தெரிய வருகிறது.

குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரச இயந்திரமே தடையாக இருப்பதன் காரணமாகத்தான் சந்தேகத்துக்குரிய சில அமைச்சர்கள் மீது நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதல் காரணமாக சாதாரண அப்பாவி முஸ்லீம் மக்களுக்கு தொல்லைகள் கொடுப்பவர்கள், ஏன் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய செல்வாக்குமிக்க முஸ்லீம் அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கின்றனர்? இதிலிருந்தே அரசின் கபடத்தனம் புரிகின்றது.

ஏப்ரல் தாக்குதல் நடந்தவுடன் பாரிய அளவில் முஸ்லீம் மக்கள் மீது பழிவாங்கும் தாக்குதல் நடத்தப்படலாம் என பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் இரண்டொரு அசம்பாவிதங்களைத் தவிர வேறு எதுவும் பெரிதாக நடக்கவில்லை. இதிலிருந்து ஒரு உண்மை தெளிவானது. அதாவது, கொழும்பு பேராயர் அவர்களின் சமயோசித நடவடிக்கைகளினாலும், பொதுமக்களின் சகிப்புத்தன்மையினாலும் பொதுமக்கள் உணர்ச்சிவசப்பட்டு எந்தத் தாக்குதலிலும் ஈடுபடவில்லை.

ஆனால், அதன்பின்னர் சுமார் இரண்டு வாரங்கள் கழிந்த நிலையில், வடமேல் மாகாணத்தில் முஸ்லீம் மக்கள் தாக்கப்பட்டுள்ளனர். இது பொதுமக்களின் தன்னெழுச்சியான தாக்குதல் அல்ல. அவர்கள் அவ்வாறு செய்வதானால் ஏப்ரல் 21 தாக்குதல் நடந்தவுடனேயே எதிர்வினையாற்றி இருப்பார்கள். எனவே இது திட்டமிட்ட ஒரு தாக்குதலாகும். ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் சில இனவாத சக்திகள் திட்டமிட்ட முறையில் தம்மைத் தயார்படுத்திக்கொண்டு இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

வேறு பகுதிகளிலிருந்து பஸ்களில் காடையர்களைக் கொண்டுசென்று இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக இப்போது தகவல் வெளியாகியுள்ளது. சரியாக இதேபோலத்தான் 1983 யூலையில் தமிழ்மக்கள் மீதும் வெவ்வேறு இடங்களிலிருந்து ஐ.தே.க. காடையர்களை பஸ்களில் ஏற்றிச்சென்று தாக்குதல் நடத்தியது ஐ.தே.க. ஆகையால்தால் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, “மீண்டும் ஒரு கறுப்பு யூலையை ஏற்படுத்த இடமளிக்க வேண்டாம்” என அர்த்தபுஸ்டியுடன் வேண்டுகோள் விடுத்துள்ளார் போலும்.

அதுமாத்திரமில்லாமல், 1983 யூலையில் தமிழ்மக்கள் தாக்கப்பட்ட பொழுது நடந்து கொண்டதைப் போலவே, முஸ்லீம் மக்களுக்கு எதிரான தற்போதைய தாக்குதல்களின் போதும், பொலிசார் தாக்குதல் நடைபெறும் வேளை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்திருக்கின்றனர். இவைகளையெல்லாம் பார்க்கும் போது, அதிகாரத்தில் உள்ள உயர்மட்ட சக்திகளின் ஆதரவில்லாமல் இப்படியான திட்டமிட்ட தாக்குதல்கள் நடக்க வாய்ப்பில்லை.

இலங்கையின் இன வன்செயல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் சாதாரண சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் தன்னெழுச்சியாக ஒருபொழுதும் இன வன்செயல்களில் ஈடுபட்டதாக வரலாறு இல்லை. 1958, 1977, 1981 (மலையக மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்கள்), 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அத்தனை இனவாத வன்செயல் தாக்குதல்களையும் ஐ.தே.க.தான் பின்னணியில் இருந்து செயல்படுத்தியது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

அதுமட்டுமல்லாமல், கடந்த ஆட்சிக்காலத்திலும், இன்றைய ஆட்சிக்காலத்திலும் முஸ்லீம் மக்களுக்கு எதிராக சில பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களின் போதும் அரசியல்வாதிகளே பின்னணியில் இருந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்திருக்கிறது.

சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அதாவது சிங்கள, தமிழ், முஸ்லீம் மற்றும் மலையக மக்கள் ஒருவரோடுவர் பின்னிப்பிணைந்து கலந்தே வாழ்கின்றனர். உதாரணமாக, இலங்கைத் தமிழர்கள் வடக்கு கிழக்குப் பகுதிகள் தமது தாயகம் என்றும், அதற்கு சுயாட்சி வேண்டும் என்றும் கூறினாலும், வடக்கு கிழக்கிற்கு வெளியேதான் கூடுதலான தமிழர்கள், அதாவது 52 வீதமான தமிழர்கள் வாழ்கிறார்கள். எனவே அவர்களது வாழ்க்கை பெரும்பாலும் மற்றைய இனங்களுடன் பின்னிப்பிணைந்ததாகும். எனவே அவர்கள் காரணமின்றி ஒருவரையொருவர் அடித்துக்கொள்ளும் தேவையில்லை.

ஆனால் சகல இனங்களையும் சேர்ந்த அரசியல்வாதிகள் அப்படியல்ல. அவர்கள் இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான காலத்தில் தமது அரசியல் இருப்புக்கும், வளர்ச்சிக்கும் இனவாதம்தான் ஒரேயொரு ஊக்குவிப்பு மருந்து எனக்கண்டுபிடித்து அதையே தமது நிரந்தர செயல்பாடாகக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு சில உதாரணங்கள் இருக்கின்றன.

1956இல் பண்டாரநாயக்க முதன்முறையாக ஐ.தே.கவைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றிய பொழுது, ஐ.தே.க. அவரை வீழ்த்துவதற்கு தீவிர சிங்கள இனவாதத்தைத்தான் கையில் எடுத்தது.

பண்டாரநாயக்க பிற்போக்கு சக்திகளால் 1957 இல் கொல்லப்பட்ட பிறகு அவரது துணைவியார் சிறீமாவோ ஆட்சிக்கு வந்தபொழுது ஐ.தே.க. இராணுவச்சதி மூலம் அவரை ஆட்சியில் இருந்து அகற்ற முயன்ற அதேவேளை, தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகம் என்ற போர்வையில் தமிழ் இனவாதத்தைக் கையில் எடுத்தது.

பின்னர் 1970இல் சிறீமாவோ தலைமையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைந்தபோது, ஐ.தே.க. மீண்டும் இனவாதத்தைக் கையில் எடுத்தது. அந்தத் தேர்தலில் தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் தலைவர்கள் தோல்வியடைந்ததால், அவை இரண்டும் தமது நீண்டகாலப் பகைமையை மறந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற போர்வையில் கூட்டுச் சேர்ந்து ‘தமிழ் ஈழம்’ என்ற போர்வையில் தமிழ் இனவாதத்தைக் கையில் எடுத்தன.

அதன் பின்னரான காலத்தில் 1977இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கவும், தமிழர்

விடுதலைக் கூட்டணியால் தூண்டிவிடப்பட்ட தமிழ் ஆயுதக்குழுக்களும் தொடர்ச்சியாக இனவாதச் செயல்களை முன்னெடுத்து நாட்டை யுத்தம் என்ற அழிவுப்பாதையில் இழுத்துச் சென்றனர்.

இந்த வரலாற்று அனுபவங்களை வைத்துப் பார்க்கையில், மீண்டும் சில அரசியல சக்திகளுக்கு இனவாதச் செயல்பாடுகள் அவசியப்படுகின்றன என்பது தெளிவாகின்றது. குறிப்பாக, அடுத்த ஜனாதிபதி, மாகாணசபை, பொதுத்தேர்தல் என்பனவற்றில் தோல்வியடைவோம் என்ற பயத்தில் உள்ள சிங்கள – தமிழ் அரசியல் சக்திகளுக்கு தம்மைத் தோல்வியிலிருந்து காப்பாற்றுவதற்கு இனவாதம் தேவைப்படுகின்றது.

அவர்களுடைய இந்த இனவாதத் தேவையும் செயல்பாடுகளும் தனியனே அவர்களது சொந்த செயற்பாடு அல்ல. அவர்களை எந்த அந்நிய சக்திகள் தமது நலன்கருதி 2015 ஜனவரியில் ஆட்சியில் இருத்தினார்களோ, அந்த அந்நிய சக்திகளுக்கும் இதில் பங்குண்டு.

எனவே தற்போது நாட்டில் முஸ்லீம் மக்களுக்கு எதிராக நடைபெறும் சம்பவங்களை வெறும் இனவாதச் செயல்களாகக் கருதாமல் இதன் பின்னால் உள்ள அரசியல் நோக்கங்களையும் பொதுமக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இன்று முஸ்லீம் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இனவாத வன்செயல்கள் நாளை வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராகவும் கட்டவிழ்த்துவிடப்படலாம். எனவே சிறுபான்மைத் தேசிய இன மக்கள் மிகுந்த விழிப்புடன் இருப்பதுடன், பெரும்பான்மை சிங்கள மக்களுடன் நேசபூர்வமாகவும் இருப்பது அவசியம்.

இனவாத அரசியல் சக்திகளினால் வழிநடத்தப்படும் காடையர் கூட்டம் பொய் வதந்திகளைப் பரப்பி, மக்களை தவறாக வழிநடத்தி, அவர்களை உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஆழ்த்தி, இனவன்செயல்களைத் தூண்டிவிட முயற்சிப்பார்கள். எனவே அவர்களது சதி நோக்கங்களில் சிக்காமல் மக்கள் விழிப்பாகவும், நிதானமாகவும். இன ஒற்றுமையுடனும் இருப்பது இன்றைய காலகட்டத்தின் அத்தியாவசிய தேவையாகும்.

நாம் அவ்வாறு செயல்படாதுவிட்டால் மீண்டும் ஒரு 'கறுப்பு யூலை' உருவாகுவதும், நாட்டில் இரத்த ஆறு ஓடி, நாட்டில் நிரந்தரமாக இருள் சூழ்வதும், அதனைப் பயன்படுத்த அந்நிய சக்திகள் தலையீடு செய்வதும் சாத்தியமாகிவிடும்.

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

இங்கேதான் சில காலம் வாழ்ந்தார் அதன் பிறகு வலப்புறமுள்ள வீட்டிற்கு குடிபெயர்ந்தார். அங்கேதான் அவரது வாழ்வின் கடைசி 11 வருடங்களை கழித்தார்'' என்கிறார். அவர் வசம் ஜனாதிபதி மாளிகை இருந்தது. ஆனால் அவர் பெரும்பாலான மக்கள் வாழும் வழியிலேயே தானும் வாழ விரும்புவதாக கூறினார்.

*1890*–ல் ஹோ சி மின் பிறந்தபோது வியட்நாம் பிரான்ஸ் காலனி ஆதிக்கத்தில் இருந்தது. *1911*–ல் பிரஞ்சு கப்பலில் சமையல்காரராக பணியாற்றுவதற்காக நாட்டை விட்டுச் சென்றபோது அவர் பதின் பருவத்தை கடந்து சில ஆண்டுகளே ஆகியிருந்தது. ஆனால் விரைவிலேயே பிரஞ்சு காலனி ஆதிக்கத்திற்கு எதிராக உலகத்தின் அபிப்ராயங்களை அணி திரட்ட வேண்டியத் தேவை தனக்கு உள்ளது எனப் புரிந்து கொண்டார்.

அவர் பிரான்சில் ஓர் பத்திரிகை ஆசிரியராக இருந்தார், மாஸ்கோவுக்கு பலமுறை பயணம் செய்த ஹோ சி மின், சீனாவில் *1930–1940*களில் நன்றாக வளர்ந்து கொண்டிருந்த சீன புரட்சியில் பங்கெடுத்தார். அவரது புரட்சிகர செயல்பாடுகளுக்காக சீனாவில் கைது செய்யப்பட்டார். ஆனால் ஹோ சி மின் தன் நாடான வியட்நாமுக்கு சுதந்திரம் கிடைப்பதில் முழுக் கவனமும் செலுத்தினார். அவர் வியட்நாமுக்குச் சென்ற நான்கு வருடங்களில் அதாவது *1945*–ல் சுதந்திரம் கிடைத்தது.

இவரை இந்தியாவுக்கு நன்றாகவே தெரியும். ஜவஹர்லால் நேருவின் நண்பர் என்பதால் மாத்திரம், இவருக்கு இந்தியாவில் புகழ் கிடைக்கவில்லை, அவருடைய புரட்சிகரமான யோசனைகளுக்காகவே இந்தியாவில் புகழ்பெற்றார். *1958*–ல் அவர் இந்தியா வந்தபோது நேரு அவரை அன்புடன் வரவேற்றார் மேலும் இளம் இந்தியர்கள் அவரை பாசத்துடன் 'மாமா' ஹோ என அழைத்தனர்.

குயென் வான் காங் என்பவர் ஹோ சி மின் அருங்காட்சியத்தின் இயக்குநர். "பிரதமர் நேரு மற்றும் ஹோ சி மின் இருவரும் நல்ல நண்பர்கள். அவர் இந்தியாவில் நேருவால் அன்புடன் வரவேற்கப்பட்டார். இளம் சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் அவரை மாமா ஹோ என அழைத்தனர். இந்தியர்கள் அவர் மீது அன்பு செலுத்தினர்'' என்றார்.

டெல்லி மற்றும் கொல்கத்தாவில் ஒரு சாலைக்கு இந்திய அரசால் ஹோ சி மின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அவருடைய வாழ்நாளில் ஹோ சி மின் வட வியட்நாமின் அதிபராக மட்டுமே இருந்தார். தனது நாட்டை தென் வியட்நாமுடன் ஒன்றிணைப்பதற்காக அவர் போராடியதற்கு பலன் அவர் இறந்து ஆறு வருடங்களுக்கு பிறகே கிடைத்தது.

**-ஜுபைர் அகமது**
**பிபிசி செய்தியாளர்**
***27.04.2018***

# 'மேற்குலகை நம்பி ஏமாற வேண்டாம்'

மதங்களுக்கிடையே மோதல்கள் இடம்பெறுவதற்கு வழிசமைக்காது, அனைவரும் ஒற்றுமையாகப் பணியாற்ற வேண்டுமென, அமரபுர நிக்காயவின் மஹாநாயக்க தேரர் அதி வணக்கத்துக்குரிய கொட்டுகொட தம்மாவாச தேரர் வலியுறுத்தினார்.

கொழும்பில் மே 10 இல் நடத்தப்பட்ட சர்வமதத் தலைவர்களின் ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பேராயர் கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, மேற்குலக நாடுகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை நம்பி ஏமாறாது, அனைத்தின மக்களும் ஒற்றுமையாகப் பணியாற்ற வேண்டுமென்றார்.

ஆயுத உற்பத்திகளில் ஈடுபடும் நபர்களுக்கு, யுத்தமொன்று ஏற்படுவது அவசியமென்றும், அவ்வாறான ஆயுத உற்பத்திகளில் ஈடுபடும் மேற்குலக நாடுகளால் யுத்தங்களின்றி வாழ முடியாதென்றும் பேராயர் கூறினார்.

**நன்றி: தமிழ் மிரர்**

**புரட்சிகர மேதின வாழ்த்துக்கள்!**
- வானவில் ஆசிரியர் குழு

# இலங்கையில் உள்ள மதுபான நிலையங்களில் 90 வீதமானவை அரசியல்வாதிகளுக்குச் சொந்தமானவை!

## போட்டுடைக்கிறார் சப்ரகமுவ மாகாண ஆளுநர்!!

**இ**லங்கையில் செயல்படும் மதுபான விற்பனை நிலையங்களில் 90 சதவீதமானவை அரசியல்வாதிகளுக்குச் சொந்தமானவை என சப்ரகமுவ மாகாண ஆளுநர் கலாநிதி தம்ம திசநாயக்க கூறியிருக்கிறார்.

போதைப்பொருள் தடுப்பு வாரத்தையொட்டி சீவலி மாகாவித்தியாலயத்துக்கு முன்னறிவித்தல் இன்றித் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட போது மாணவர்கள், ஆசிரியர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த விஜயத்தின் போது ஏதாவது ஆலோசனைகள் இருந்தால் சொல்லும்படி அவர் மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.

அப்போது ஒரு மாணவன், "அரசாங்கம் ஒருபக்கத்தில் போதைப்பொருள் தடுப்புப் பற்றிப் பிரச்சாரம் செய்துகொண்டு மறுபக்கத்தில் ஏன் மதுபான நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்குகிறது?" எனக் கேள்வி எழுப்பினான்.

இன்னொரு மாணவன், "ஏன் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி போதைப்பொருள் போன்றவற்றை ஒழிக்க முடியாது?" எனக் கேள்வி எழுப்பினான்.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்த ஆளுநர் திசநாயக்க,

"மதுபான விற்பனையை அரசியல்வாதிகள் நிறுத்துவார்களானால், 90 வீதமான மதுபான விற்பனை நிலையங்களை மூடிவிட முடியும். அரசியல்வாதிகளின் நேரடி, மறைமுக தலையீடுகள் இல்லாவிடின் மதுபான விற்பனை நிலையங்களை மூடிவிட முடியும்" எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்,

"மதுபான விற்பனை மூலம் கிடைக்கும்



கலாநிதி தம்ம திசநாயக்க

வருமானத்துடன் ஒப்பிடுகையில் சமூக – கலாச்சார விடயங்களைத் தீர்ப்பதற்கு ஒதுக்கப்படும் தொகை அற்பமானது. இதனால் பொருளாதார, கலாச்சார மற்றும் தார்மீகத் துறைகளில் பாரிய பாதிப்பு ஏற்படுவதுடன், நாட்டின் வளர்ச்சியிலும் பெரும் தாக்கம் ஏற்படுகிறது" எனக் குறிப்பிட்டார்.

**குறிப்பு:** சப்ரகமுவ மாகாண ஆளுநரின் இந்தக் கூற்றுகள் தென்மாகாண அரசியல்வாதிகளுக்கு மட்டுமின்றி தமிழ் அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும்.

1970 – 77 சிறீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில், அந்த அரசில் தபால் - தந்தி அமைச்சராக இருந்த செல்லையா குமாரசூரியரின் ஆதரவாளர் ஒருவர் அவர் மூலம் மதுபான விற்பனை அனுமதி பெற்று பரந்தனில் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தினார். பின்னர் அவர் அவுஸ்திரேலியாவுக்கு இடம் பெயர்ந்து அங்கும் பல வியாபார நிலையங்களைத் திறந்து கோடீஸ்வரராக வாழ்ந்து வருகின்றார்.

அதேபோல, கடந்த ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான ஒருவர், நாடாளுமன்றத்திலும் உயர் பதவி வகித்ததுடன், அதன் மூலம் கிடைத்த அரசியல் செல்வாக்கால் மதுபான விற்பனை அனுமதி பெற்று தற்போது கிளிநொச்சியில் மதுபான விற்பனை நிலையமொன்றை நடத்தி வருகின்றார்.

மக்கள் தெரிவு செய்து அனுப்பும் இவர்கள் மாதாந்தம் கொழுத்த சம்பளங்களையும் இதர சலுகைகளையும் பெற்று அனுபவித்து வருவதுடன், இவ்வாறான மதுபான விற்பனை நிலையங்கள், இறக்குமதித் தீர்வையற்ற சொகுசு வாகன இறக்குமதி, இராஜதந்திர கடவுச்சீட்டுகளில் வெளிநாட்டு இலவசப் பயணங்கள் என பல வரப்பிரசாதங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆனால் மக்களோ.... இவர்களுக்கு இத்தகைய வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொடுத்துவிட்டு, ஒழுங்கான வேலையோ, மூன்றுநேரச் சாப்பாடோ, பிள்ளைகளுக்கு சீரான கல்வியோ, குடியிருக்க வீடோ, ஆன துணிமணிகளோ இன்றி அனாதைகளாக நிற்கின்றனர்.

# 'எமது நாடு சிங்கள பௌத்த நாடாகும்'

இந்நாட்டில் தீவிரவாத கருத்துகளை பரப்புகின்ற குழுக்களை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டுமென்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன கூறியிருக்கிறார். 19.05.2019 இல் கம்பஹாவில் இடம்பெற்ற ஊடகவிலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்துரைக்கையில், இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்றும், அமைச்சர் மங்கள சமவீரவுக்கு எமது நாடு ஒரு பௌத்த நாடு என்பது பற்றி தெரியவில்லை என்றும், அவர் கூறும் கருத்துகள் அனைத்தும் அவரது தனிப்பட்ட கருத்துகள் மாத்திரமே என்றும் அமைச்சர் ருவன் விஜேவர்தன மேலும் தெரிவித்தார்.

நன்றி:தமிழ் மிரர்